பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்

...... கோர்ப்பரேஷன்
...... வீதி, கொழும்பு

Registered as a News paper in Ceylon
விலை சதம் 15

# ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 10 [12-1-69] இதழ் 335
யாழ்ப்பாணம் கீலக மார்கழி 29 ஷவ்.22 ஞாயிறுக்கிழமை

சர்க்கரை வேண்டுமா?
சிறிதும் கலப்பின்றி
சுத்தமான
சர்க்கரை
தொகையாக
எமது கையிருப்பிலுண்டு
பொங்கல் திருநாளை
பொலிவுடன் கொண்டாட
எம்மை நாடுங்கள்!

ஆ. வயித்திலிங்கம் அன் கோ
45, கே.கே.எஸ். ரேட், யாழ்ப்பாணம்.
போன்: 663

# மேலும் ஒரு கொத்து அரிசி வழங்கப்படும்?

## அரசாங்கத்தின் புத்தாண்டு பரிசு

கொழும்பு, ஞாயிறு

**இப்போது வழங்கப்படும் கூப்பனுக்கான இலவச அரிசியுடன், கூப்பனொன்றுக்கு மேலும் ஒரு கொத்து அரிசி கூடுதலாக வழங்குவதற்கு அரசாங்கம் யோசனை செய்து வருகிறது. அரசாங்கத்தின் புத்தாண்டுப்பரிசாக இது வழங்கப்படலாம்.**

**கூப்பன் ஒன்றுக்கு மேலதிகமாக வழங்கப்படும் ஒரு கொத்து அரிசியின் விலை 50 சதமாக இருக்கும்.**

கூப்பன் ஒன்றுக்கு இப்போது ஒரு கொத்து இலவச அரிசி வழங்கப்படுகின்றது. அரசாங்கத்தின் புதிய திட்டப்படி ஒவ்வொரு கூப்பனுக்கும் ஒவ்வொரு கொத்து அரிசி மேலதிகமாக வழங்கப்படும். இந்த ஒரு கொத்து அரிசி 50சதத்துக்கு வழங்கப்படும். கூப்பன் ஒன்றுக்கு இலவச அரிசி ஒரு கொத்து வழங்கப்படும் போது விரும்பினால் 50 சதம் கொடுத்து கூப்பன் ஒன்றுக்கான ஒரு கொத்து மேலதிக அரிசியையும் பெற்றுக் கொள்ளலாம்.

நாட்டு மக்களின் நன்மை கருதி இப்புதிய திட்டத்தை அமுல்நடத்தவிருப்பதாக அரசாங்க உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இப்புதிய திட்டத்துக்கு அரசாங்க எம். பி.க்கள், மந்திரிகள் பலத்த ஆதரவு தெரிவித்துள்ளனர். எதிர்க் கட்சியினரும் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளதாக அரசாங்க தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது சம்பந்தமான முடிவு விரைவில் அறிவிக்கப்படும்.

## பொங்கல் சுற்றுலா

யாழ்ப்பாணம், ஞாயிறு

வண்ணை வைத்தீஸ்வரன் பஜனைச்சபையினர் பொங்கல்விழாவையொட்டி நேற்றுத்தொடக்கம் நாளைவரை மாலை 5 மணிக்கு இல்லங்களுக்குச் சென்று பொங்கல் வாழ்த்துநிகழ்ச்சிகள் நடத்தவிருக்கின்றனர். இவர்களை வாழ்த்தி உபசரிக்கும் வண்ணம் மேற்படி பஜனைச் சபையின் செயலாளர் திரு. ச. செந்தில்வேல் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## இன்று தலைவர் தேர்வு

சங்கானை, சனி

சங்கானைப் பட்டினசபைத் தலைவர் தெரிவு நாளைநடைபெறவிருக்கிறது.

## காமன்வெல்த் மகாநாடு

லண்டன், ஜன 11

காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு 14-ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. சர்ச்சைக்குரிய ரொடீஷிய பிரச்னை விவாதத்தின் பின் இது ஒத்திவைக்கப்பட்டது.

பிரதமர் டட்லி சேனநாயக்காவுக்கு இன்றுஇலங்கை மாணவர் சங்கம் தேநீர் விருந்துபசாரம் ஒன்று அளித்தது.

## கல்லூரி அதிபர் இடமாற்றம் பின்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஞாயிறு

உடும்பராய் இந்துக்கல்லூரி அதிபர் திரு. ஏ. வைத்திலிங்கத்தின் இடமாற்ற உத்தரவு பின்போடப்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

ஆசிரிய சங்கத் தலைவருமான திரு. வைத்தியலிங்கம் அடுத்த மாதம் முதல் திகதி தொடக்கம் பூண்டுலோயா மத்திய வித்தியாலயத்துக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டிருப்பதாகச் சில தினங்களுக்கு முன்னர் திடீரென அறிவிக்கப்பட்டது. இந்த இடமாற்றத்தை பெற்றார் ஆசிரியர் சங்கமும், பழைய மாணவர் சங்கமும், வடமாகாண ஆசிரிய சங்கமும் ஆட்சேபித்து இடமாற்றத்தை ரத்துசெய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தன. வலி. கிழக்கு ஆசிரியர் சங்கம் இது சம்பந்தமாக, கோப்பாய்ப் பிரதிநிதி திரு. சி. கதிரவேற்பிள்ளையைப் பேட்டி கண்டது. கல்விமந்திரியுடன் அவர் தொடர்புகொண்டபோது இடமாற்றம் பின்போடப்பட்டிருக்கும் தகவல் கிடைத்ததாம்.

## ஸ்ரீமதி இந்திரா

புதுடில்லி, ஜன. 11

காமன்வெல்த் மகாநாட்டில் கலந்து கொண்ட பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இன்று புதுடில்லி திரும்பினார்.

## விரைவில் கைத்தொழில் பேட்டை

அச்சுவேலி, சனி

விரைவில்அச்சுவேலிப் பகுதியில் கைத்தொழில்பேட்டை ல்அமைக்கப்படவிருக்கிறது.

நிலாவரையிலிருந்து இத்தொழில்பேட்டைக்கு வேண்டிய நீரைப்பெறமுடியுமென இதுசம்பந்தமான அதிகாரிகள் முடிவுசெய்துள்ளனர். வாய்க்கால் மூலமே நீர் விநியோகிக்கப்படவிருக்கிறது.

தற்போது இப்பகுதியிலுள்ள சில பகுதிகளுக்கும் வாய்க்கால் மூலமே கமத்

(8-ம் பக்கம் பார்க்க)

'இராணுவத்தை அகற்றக் கோருவது

## கள்ளக்கடத்தலைச் சுலபமாக்க ஒரு வழியாம்'

கொழும்பு, சனி

''வடபகுதியில் பொதுமக்களை இராணுவத்தினர் தாக்குவதாக செய்யப்படும் புகார்கள் பொய்யானவையாகும். இதற்கு சாதகமாக சில வடபகுதி அரசியல்வாதிகளும் பொய்ப்பிரசாரம் செய்கிறார்கள். இப்படியான புகார்கள் மூலம் இராணுவத்தை வடபகுதியிலிருந்து அகற்றிவிட்டு, கள்ளக் கடத்தலை சுலபமாகச் செய்ய இவர்கள் திட்டமிட்டுச் செய்யும் செயல் இது என நான் கருதுகின்றேன்.''

இராணுவத்தளபதி திரு. சேபால அட்டிகலே தனது அறிக்கை யொன்றில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வடபகுதியிலுள்ள இராணுவ நிலையங்களுக்கு இரண்டு நாள் விஜயத்தை மேற் கொண்டுவிட்டு நேற்றுக் கொழும்பு திரும்பிய பின்னரே திரு. சேபால அட்டிகலே இதனை அறிவித்தார்.

இதுபற்றி அவர் தயாரித்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடபகுதியில் இராணுவத்தினர் பொதுமக்களைத் தாக்குவதாக செய்யப்படும் புகார்கள் பொய்யான புகார்களாகும். யாரையாவது கள்ளக்கடத்தல் செய்யும்போது இராணுவத்தினர் கைது செய்தால், அவர்கள் இராணுவத்தினர் தம்மைத் தாக்கிவிட்டதாக பொய்ப்

(8-ம் பக்கம் பார்க்க)

## கடலில் ஒரு வீடு

### வல்வெட்டித் துறையில்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

வல்வெட்டித்துறைக் கடற்கரையில் நேற்று முன்தினம் பி.ப. நவீனமாடிகளைக்கொண்டமிதக்கும்வீடு ஒன்று மிதந்து வந்திருந்தது. நான்கு மாடிகளைக் கொண்ட இவ்வீடு முழுவதும் மூங்கில் சலாகைகளினாலே ஆக்கப்பட்டதை காணக்கூடியதாகவிருக்கிறது. சுமார் 20 அடி நீளமும், 10 அடி அகலமும், 25 அடி உயரம் உடையதாக விருக்கிறது. கட்டுமரத்தில் சென்று பார்வையிட்ட மக்கள் அவ்வீட்டினுள் சட்டி, பானைகள், கருவாடு, விறகு முதலியன இருப்பதாகக் கூறுகிறார்கள். ஏராளமானோர் இவற்றை பார்வையிட்டுச் செல்கின்றனர்.

## 'தமிழரசு பிரமுகர்க்கு விரக்தி ஏற்பட்டுவிட்டது'

கொழும்பு, சனி

'அரசாங்கத்துடன் இறுக்கமாக இணைந்திருந்த சில தமிழரசுக் கட்சிப் பிரமுகர்களுக்கே இப்போது விரக்தி நிலை ஏற்பட்டுவிட்டது. சில தமிழரசுக்கட்சி அங்கத்தவர்கள், யாழ்ப்பாணத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக் கிளை ஒன்றை நிறுவுமாறு எம்மைக் கேட்கின்றார்கள்.'

எதிர்க்கட்சித் தலைவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவியுமான திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8,ம் திகதி நடைபெற்ற தமிழ்மொழிச் சட்ட விசேஷ விதிகள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போது நிகழ்ந்த துப்பாக்கிப்பிரயோகச்சம்பவத்தில்மாண்ட தம்பரவெல ரத்னசார தேரோவின் மூன்றுவது ஆண்டு நினைவு அஞ்சலியில் கலந்துகொண்டு பேசுகையிலேயே திருமதி ஸ்ரீமாவோ இவ்வாறு தெரிவித்தார். கொழும்பு செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் பேசுகையில், 'தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் செனட்டர் ஒருவர் இன்னும் சிலருடன் என்னிடம் வந்து யாழ்ப்பாணத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கிளையை அமைக்கும்படி கேட்டார்' என்று கூறினார்.

டாக்டர் என். எம். பெரேரா பேசுகையில், 'எப்

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

**கல்வி**

பருத்தித்துறையில் திருமதி கமலா கிருஷ்ணமூர்த்தி (சங்கீத பூஷணம்) அவர்களால் 20-1-69 முதல் வீணை வகுப்பு ஆரம்பிக்கப்படவிருக்கின்றது. சேர விரும்புவோர் விண்ணப்பிக்கலாம். விபரங்கட்கு: திருமதி இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், 'பாலராஜேஸ் வாசா' ஓராங்கட்டைச் சந்தி, பிரதானவீதி, பருத்தித்துறை. தொலைபேசி: 578. 479

**கல்வி**

கணக்கியல், வர்த்தகமும் நிதியும், வர்த்தக கணிதம், சுருக்கெழுத்து பொருளாதாரம் முதலியன 1969 பங்குனி, மார்கழி க. பொ. த. பரீட்சைகளுக்காக 47 வருட அனுபவமுள்ள வர்த்தக ஆசிரியரால் தபால் மூலம் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. உடன் விண்ணப்பிக்கவும். வர்த்தகக் கல்லூரி, பருத்தித்துறை. 475

பாடசாலைகளில் மூன்றும் வகுப்புத் தொடக்கம் ஆங்கிலம் கற்பிக்கவேண்டுமென்னும் பிரமாணத்திற்கமைய, ஆங்கிலம், எண்கணிதம், தமிழ் ஆகிய மூன்று பாடங்களும் மாலை மூன்று மணி தொடக்கம் ஆறு மணி வரை பயிற்றப்பட்ட ஆசிரியர்களால் 3, 4, 5, 6, 7-ம் வகுப்புகளுக்குக் கற்பிக்கப்படுகின்றன. வர்த்தகக் கல்லூரி, பருத்தித்துறை. 472

**மனோஹரா**
(யாழ்ப்பாணம்)
தினசரி:- 6-30-9-30
ஜெமினி-எஸ். வி. சுப்பையா வனஜா-சுந்தரிபாய் சகஸ்ரநாமம்-லலிதா
நடித்த
**வள்ளியின் செல்வன்**
கலரி 35 சதம்

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
ரவிச்சந்திரன் - பாரதி
நடித்த
**தங்கத் தம்பி**

மானிப்பாய்
**வெஸ்லி சினிமா**
தினசரி 6 30, 9-30
பிரிபோயா, போயா 2-30
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
**ஆலய மணி**

**வின்ஸர்** தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
**நம்பியார், அசோகன், நாகேஷ்**
நடித்த
# ரகசியப்பொலீஸ் 115
(ஈஸ்ட்மென்ட் கலர்)

உலகில் பிரசித்திபெற்ற இடங்களில் படமாக்கி ஓடி வெற்றியீட்டி கொழும்பில் 23 வாரங்களுக்கு மேல் ஓடிக்கொண்டிருக்கும் அனேகரின் பாராட்டைப் பெற்ற மகத்தான **ஹிந்தி வர்ணச்சித்திரம்**
யாழ். மக்களின் அன்பு பொங்க
**பொங்கல் விருந்தாக**
**வெலிங்டன்** யாழ் நகர்
தினசரி 1-30, 6-00 9-30 மணி



ராஜ்கபூர், வைஜயந்திமாலா ராஜேந்திரகுமார்
நடித்த
ராஜ்கபூரின்
# சங்கம்
(ரெக்னிக் கலர்)
இசை: சங்கர் ஜெய் கிஷன்

**5—வது வாரம்**
**கிங்ஸ்லி** (கொழும்பு)
சிவாஜி — தேவிகா
நடித்த
**நீலவானம்**


# ஓய்வுபெறும் ஆசிரியர்



யாழ்ப்பாணத்தில் கடந்த ஒரு கால் நூற்றாண்டுக்கு மேலாக சிறந்த ஆசிரிய திலகமாகத் திகழ்ந்த பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியரும், துணைஅதிபருமான திரு. ஆர். எம். குணரத்தினம் அவர்கள் 1-1-69 முதல் ஓய்வுபெற்றுவிட்டார்.

சிரித்தமுகமும் இன்சொல்லும் நீங்காத சுபாவம் கொண்ட அவர் இனிக் கல்லூரியில் உலவமாட்டார்- மாணவர் மத்தியில் கற்றுக் கொடுக்கமாட்டார், கால் நூற்றாண்டாகக் கண்ணும் கருத்துமாய்க் காத்துவந்த கல்வி நிறுவனத்திலிருந்து அவர் பிரிகின்றார்-அவர் கட்டடத்திலிருந்துதான் பிரிகின்றார். கட்டடத்தில்வளர்ந்த உள்ளங்களில்-வளர்ந்து வரும் உள்ளங்களில் அவர் அன்றலர்ந்த தாமரையாக மலர்ந்து காட்சியளிக்கிறார்- என்றும்அவர் நினைவு பசுமையாகவே இருக்கும். தனக்கென அவர் சமூகத்திலே ஒரு தனி இடத்தைப் பிடித்துக்கொண்டார். இத்தனை காலமும் செய்த தன்னலங் கருதாச் சேவையின்பின் ஓய்வு எடுக்கப்போகின்றார்.

சிலகாலமேனும் நான் அவரிடத்திலே மாணவனைக் கல்வி கற்கும் பேறுபெற்றேனென்று இன்று உண்மையிலேயே உள்ளம் களிகொள்கிறது.

ஆர். எம். ஜி. அவர்கள் கணிதமும் பௌதிகமும்கற்பிப்பதில் தனிமேதையாக விளங்கினார். நான் எஸ். எஸ். ஸி. யில் கற்றுக்கொண்டிருந்தபோது எனக்கும் கணிதத்திற்கும், தமிழிற்கும் தூரத்து உறவாக இருந்தது. அப்போது கணிதம் கற்பிக்க திரு. ஆர். எம். ஜி. யும், தமிழ் கற்பிக்க திரு. எஸ். வி. குணநாயகம் அவர்களும் என் ஆசிரியர்கள் ஆனார்கள். தமிழில் நான் எந்த இடைத்தவணைத்தேர்விலும்சித்தியடைந்ததில்லை. என்வகுப்பாசிரியரான திரு. ப. ஏகாம்பரம் இரண்டாந் தவணைத் தேர்வின்பின், 'இன்னும் தமிழில் சித்தியடையவில்லை' என்று எழுதினார். அதை அப்போதைய அதிபர் திரு. க. பூரணம்பிள்ளை சிவத்த மையால் அடையாளம் செய்துவிட்டார். அதேபோலவே கணிதத்திலும் சித்தியடையவில்லை. ஆனால் பின்பு இந்த இரண்டு கற்றுவல்ல ஆசிரியர்களின் உதவியைக் கொண்டு இரண்டுபாடங்களிலும் முன்வேறினேன். எஸ். எஸ். ஸி. தேர்வு எடுக்கவிடுவதற்கான கடைதற் தேர்வில் தமிழில் 67 புள்ளிகள் பெற்றேன். அதன்பின் தமிழ் என்னைவிட்டு நீங்கவில்லை.

அதே தேர்வில் கணிதத்திற்கு60 புள்ளிகள்கிடைத்தது எல்லோருக்கும் ஆச்சரியத்தைத் தந்தது. கணிதத் திறமை மிக்க காரணத்தால் உயர்கணிதம் செய்த மாணவர் சிலர் 60க்கும் சற்று குறைவாகப் புள்ளி எடுத்தனர். ஆனால் இந்த வெற்றிக்கு நான் காரணமல்ல-அது ஆர். எம். ஜி. யின் திறமையான போதனையைக் காட்டுகிறது. அவர் வகுப்பறையில் வந்து ஒரு கேத்திர கணிதத் தேற்றத்தையோ, அட்சரகணித சமானத்தையோ விளக்கினால், அது பசுமையாக மனதில் படிந்துவிடும். அவ்வளவு தெளிவாக விளக்குவதில் அவர் கைதேர்ந்தவர் - தனக்குத் தானே ஒப்பானவர். அது மட்டுமல்ல ஒரு கணக்கைச் செய்தால் வழிமுறையும், படிமுறையும் தெளிவாகக் காட்டப்படவேண்டும். இது அவரது கணிதம் கற்பிக்கும் திறமையைக் காட்டுகிறது. ஹாட்லியில் பௌதிகம் கற்பிக்கவும், கணிதம் கற்பிக்கவும் திறமையான ஆசிரியராக இருந்த திரு. சி. இராசதுரை விட்டுச்சென்றபின்- குறிப்பாகப் பௌதிகம் கற்றுக்கொடுக்கத்தக்க ஆசிரியர் இல்லாமல் இருந்தது. அந்தகுறையை நீக்கியவர் ஆர். எம். ஜி. அவர் பௌதிகம் கற்பிப்பதிலும் தனிவழியைக் கையாண்டு வெற்றி கண்டவர். ஆகவே ஹாட்லியின் வரலாற்றில் கணிசமான காலம் விஞ்ஞானக் கல்வியின் முக்கிய தூணாகத் திகழ்ந்தவர்களுள் ஆர். எம். ஜி. தலைசிறந்தவர் என்பதில் ஐயமில்லை.

ஆர். எம். ஜி. யிடம் நிறைய நகைச்சுவையும் உண்டு. வகுப்பறையில் கண்டிப்பான ஆசிரியராகக் காட்சிதரும் அவர் வெளியே குலுங்கிச் சிரிக்கவைக்கும் நகைச்சுவையாளராக விளங்கினார். ஒரு முறை ஹாட்லிக் கல்லூரிக்கும் யாழ். இந்துமகளிர் கல்லூரிக்குமிடையில் தமிழில் விவாதம் நடக்கவிருந்தது. இந்துமகளிர் கல்லூரிக்கு செல்ல அனுமதிகோரவேண்டியிருந்தது. அன்று திரு. ஆர். எம். ஜி. தான் பதில்அதிபராக இருந்தார். அவரிடம் அனுமதி கோரினோம். விஷயத்தை அறிந்ததும் 'குட்டுவாங்கினாலும் மோதிரக்கையால் குட்டு வாங்கவேண்டும்' என்று நகைச்சுவையாகப் பதிலிறுத்துஎல்லோரையும் சிரிக்க வைத்தார். இத்தகைய நகைச்சுவைத் துணுக்குகள் அவரிடம் அதிகமாக இருந்தது.

ஆர். எம். ஜி. ஒரு கண்டிப்பான பேர்வழி. ஒழுக்கம், கண்ணியம் என்பவற்றைப் பேணாத மாணவர்களிடம் மிகக் கண்டிப்பாக நடந்தார். ஏழை மாணவர்களிடம் பரோபகாரியாக நடந்தார். வகுப்பறைக்கு வெளியே தந்தைபோல்அறிவுரை கூறுவார்- நல்வழி காட்டுவார். எந்த ஒரு கோணத்தில் நின்று பார்த்தாலும் அவர் ஒரு துல்லிய தாரகையாகத் திகழ்ந்தார்- ஓர் எடுத்துக்காட்டான பண்பாளராகத்திகழ்ந்தார், அவருடைய ஆசிரிய வாழ்வு ஒரு முழுமைபெற்ற ஒளிமயமான வாழ்வு. ஆசிரிய உலகம் அவரைப் பின்பற்றக் கடமைப்பட்டுள்ளது- மாணவ உலகம் அவரை என்றுமே மறக்காது. ஆர். எம். ஜி. கல்வி உலகில் ஒரு திலகம்.

—ஆ. தேவராஜன்


**ராணி**
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
**என் தம்பி**

இணுவில்
**ஸ்ரீ காலிங்கன்**
தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30
ஜெமினி - வைஜயந்தி
நடித்த
**தேன் நிலவு**

மகிழ்ச்சிகரமான பொங்கல் திருநாளைமுன்னிட்டு
# "பொகுமால்ஸ்"
**ஸ்தாபனத்தார் அளிக்கும்**
## விசேட மலிவுவிற்பனை

| | வி. வி. | ம. வி. |
|---|---|---|
| டிப்ளோமற்ரெற்ரேன்-கொட்டன்சேட் | 22-50 | 18-00 |
| டியூரோ நைலோன் "ஸ்ரைப்" சேட் | 29-50 | 26-50 |
| டியூரோ ,, பிளேன் ,, | 24-50 | 17-00 |
| ஸோடியக் ,, இயாட்டெக்ஸ் ,, | 24-00 | 15-00 |
| ஸோடியக் ,, "ஸ்ரைப்" புஸ் ,, | 20-00 | 15-00 |
| மூர்ட்டெக்ஸ் ,, சேட் | 22-00 | 16-00 |
| பேபி றபர் சீற்ஸ் | 9-50 | 8-00 |

முக்கியமாக சேட்டு வகைகளின் விலைகள் மிக மிகக் குறைக்கப்பட்டுள்ளன.
இன்றே விஜயம் செய்யுங்கள்!
**'பொகுமால்ஸ்**
பிரதான வீதி, : : யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காமன்வெல்த்பிரதமர்கள் மாநாடு

# ரொடீஷியா மீது படைபலம் பிரயோகிக்க பிரி. பிரதமர் மறுப்பு

## வாக்குறுதிகளை வாபஸ் பெறவும் முடியாதாம்

லண்டன், ஜன. 11

**ரொடீஷியாவுக்கு எதிராக படை பலத்தை உபயோகிக்கவேண்டும் என்ற ஆபிரிக்க ஆசிய நாடுகளின் கோரிக்கையை பிரிட்டிஷ் பிரதம மந்திரி திரு. ஹரோல்ட் வில்சன் நிராகரித்துவிட்டார்.**

கடந்த வருடம் அக்டோபர் மாதம் சட்டவிரோத ஆட்சியாளர் திரு. ஐயான்ஸ்மித்துக்கு தெரிவிக்கப்பட்ட யோசனைகளைவாபஸ் பெறவும் திரு. வில்சன் மறுத்துவிட்டார்.

ரொடீஷிய பிரச்னை சம்பந்தமாக இரண்டு நாள் விவாதம் நேற்று காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் முடிவடைந்தது. ரொடீஷியாவின் சட்டவிரோத ஆட்சி சம்பந்தமாக பிரிட்டன் கடைப்பிடிக்கும்கொள்கையை ஆபிரிக்க நாடுகள் பல கண்டித்தன. சில நாடுகள் ரொடீஷியாவுக்கு எதிராக படைபலத்தைப் பயன்படுத்தவேண்டும் என்றும் கடந்த அக்டோபர் மாதம் திரு. வில்சன் சட்டவிரோத ஆட்சியாளர் திரு. ஸ்மித்துடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின்போது தெரிவித்த யோசனைகளைக் கைவிடவேண்டும் என்றும் வற்புறுத்தின. இந்த விவாதத்துக்கு நேற்று பிரிட்டிஷ் பிரதம மந்திரி திரு. வில்சன் பதிலளித்தார்.

ரொடீஷியா விஷயத்தில் பிரிட்டன் கடைப்பிடிக்கும் கொள்கையை அவர் பலமாக ஆதரித்துப் பேசுகையில், ரொடீஷியாவுக்கு எதிராக படை பலம் உபயோகிக்கவேண்டும் என்ற யோசனையை நிராகரித்தார்.

படை பலம் உபயோகிக்கப்பட்டால் ரொடீஷியாவுக்குள்ளும் வெளியிலும் இரத்தக்களரி ஏற்படும் என்று திரு. வில்சன் கூறினர்.

கடந்த அக்டோபர் மாதம் அவர் திரு. ஸ்மித்திடம் தெரிவித்த யோசனைகளை வாபஸ்பெறுவதற்கும் திரு. வில்சன் மறுத்துவிட்டார். இந்த யோசனைகளை வாபஸ் செய்தால் ரொடீஷியாவில் திரு. ஸ்மித் ஆட்சிக்கு எதிராக இயக்கம் நடத்திவருகிறவர்களின் நிலை பலவீனமாகிவிடும் என்று அவர் குறிப்பிட்டார். ஸ்மித் ஆட்சிக்கு எதிராக மக்களின் போக்கும் இதனல் மாறிவிடக்கூடும் என்று திரு. வில்சன் கூறினர். இந்த யோசனைகளை ரொடீஷிய மக்கள் ஏற்றுக்கொள்வதில்தான் இந்தப் பிரச்னைக்கு ஒரு முடிவு ஏற்படமுடியும். அப்படி அந்த மக்கள் ஏற்றுக் கொள்வார்களாஞல் அதை வெளியிலுள்ளயாரும் மறுக்கமுடியாது என்ருர் திரு. வில்சன்.



## நரியிடம் கோழிக்குஞ்சு: டட்லி வர்ணனை

ரொடீஷியாவில் பெரும்பான்மை மக்களின் ஆட்சியை ஏற்படுத்தும் பொறுப்பை திரு. ஐயன் ஸ்மித்திடம் கையளிப்பது கோழிக்குஞ்சை நரியிடம் ஒப்படைப்பதுபோலாகும் என்று இலங்கைப் பிரதம மந்திரி திரு. டட்லிசேனநாயக்கா நேற்று வர்ணித்தார்.

ரொடீஷியப் பிரச்னைகுறித்து பேசுகையிலேயே திரு. டட்லிசேனநாயக்கா இப்படி கூறினர்.

முன்பதாக சாம்பியா அதிபர் திரு. கவுண்டா பேசுகையில் பிரிட்டன் ஸ்மித் ஆட்சியை படைபலத்தின் மூலம் வழிக்கு கொண்டுவரவேண்டும் என்று வற்புறுத்தினர். ரொடீஷியா மீது படை பலத்தைப் பிரயோகிக்கவேண்டும் என்ற கருத்தைஅவர்மட்டுமே வெளிப்படையாக வற்புறுத்தினர். ரொடீஷியப் பிரச்னையில் பிரிட்டன் கடைப்பிடிக்கும் கொள்கையை அவர் கடுமையாகக் கண்டித்தார். ஸ்மித்துக்கு பிரிட்டன் விட்டுக்கொடுப்பதாக அவர் குற்றஞ்சாட்டினர். மலாவி அதிபர் பாண்டா பிரிட்டிஷ் பிரதமரின் கொள்கையை ஆதரித்தார். ஸ்மித்தின் ஆட்சிக்கு எதிராக நிலைமை மாறுவதற்கு வில்சனின் கொள்கை உதவும் என்றும் அவர் தெரிவித்தார்'' ரொடீஷியாவுக்கு எதிராக படைபலம் உபயோகிக்கப்படவேண்டும் என்ற யோசனையை ஆஸ்திரேலிய பிரதமர் திரு. கோர்ட்டனும் நியுஸிலாந்து பிரதம மந்திரியும் எதிர்த்தார்கள்.

ரொடீஷிய சம்பந்தமான விவாதத்தை பிரதமர்கள் முடித்துக் கொண்டுவிட்டார்கள். ஆனல் மீண்டும் மாகாநாடு பற்றிய இறுதி அறிக்கை சமர்ப்பிக்கும் போது காரசாரமான விவாதம் ஆரம்பமாகலாம் என்று தெரிகின்றது. அடுத்த திங்கட்கிழமை மகாநாடு மீண்டும் கூடி உலகப் பொருளாதார நிலைமைகள்பற்றி ஆராயும்.

—

### அரசியல் கைதிகள் உண்ணுவிரதம்

டாக்கா, ஜன. 11

கிழக்குப் பாகிஸ்தானில் காவலில் வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் காலவரம்பற்ற உண்ணுவிரதம் ஒன்றை ஆரம்பித்திருக்கிருர்கள். இந்தக் கைதிகளில் யாராவது மரணமாஞல் கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் கிளர்ந்தெழுவார்களென்று கிழக்குப்பாகிஸ்தானில்உள்ள எதிர்க்கட்சிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

—

### கடும்சண்டை

லாவோஸ், ஜன. 11

லாவோஸ் அரசாங்கத் துருப்புகளுக்கும் பதட் லாவோ படைகளுக்குமிடையில் கடும்சண்டை நடப்பதாகஅறிவிக்கப்பட்டுள்ளது.

### வீரர்களுக்கு வரவேற்பு

நியுயோர்க், ஜன, 11

சந்திரனைச் சுற்றிவிட்டு பூமிக்குத்திரும்பிய முதல் மூன்று அமெரிக்கர்களான போர்மன், லோவல், அன்டர்ஸ் ஆகிய மூவருக்கும் நியுயோர்க் நகர மக்கள் நேற்று வீரர்களுக்கான வரவேற்பொன்றை கொடுத்தனர். மூன்று வீரர்களுக்கும் தங்கப்பதக்கங்கள் வழங்கப்பட்டன.

—

### ஹனேயுடன் ராஜிய உறவு

வாஷிங்டன், ஜன. 11

வடவியட்ஞமுடன் ராஜிய தொடர்புகள் வைத்துக் கொள்ள ஸ்வீடன் முடிவு செய்துள்ளது. இதுகுறித்து அமெரிக்க அதிகாரிகள் அதிருப்தி கொண்டிருப்பதாகவும் தெரிகிறது. பிரான்ஸ் இதை வரவேற்றிருக்கின்றது.

—

### மண்டலசார்பற்ற நாடுகளின் மாநாடு

பெல்கிரேட், ஜன. 11

மண்டல சார்பற்ற நாடுகளின் மாநாடொன்றை மீண்டும் நடத்தவேண்டும் என்று யூகோஸ்லேவியாவும் ஐக்கிய அரபுக்குடியரசும் கருத்து வெளியிட்டுள்ளன.

யூகோஸ்லேவியாவுக்குவிஜயம் செய்துள்ள ஐக்கிய அரபுக் குடியரசின் வெளிநாட்டு மந்திரி யூகோஸ்லேவிய ஜஞதிபதி மார்ஷல் டிட்டோவுடன் நடத்திய பேச்சுக்களின் பின்னர் மேற்கண்ட கருத்து வெளியிடப்பட்டது.

— —

செக். கொள்கை

### ரஷ்யா சம்மதம்?

பிராக், ஜன. 11

செக்கோஸ்லவாக்கியாகம்யூனிஸ்ட் கட்சியின் தற்போதைய அரசியல் திட்டத்தை சோவியத் தலைமைப்பீடம் அங்கீகரித்திருப்பதாக சோவியத் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

# பாக். - இந்திய கூட்டு அமைப்பு

## தாஷ்கன்ட் பிரகடனதினத்தில் பாரதம் தெரிவித்த யோசனை

புதுடில்லி. ஜன. 11

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையிலான பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்வதற்காக இருதரப்பு அமைப்பு ஒன்றைஉருவாக்க வேண்டும் என்று இந்தியா யோசனை தெரிவித்துள்ளது.

தாஷ்கன்ட் பிரகடனம் கைச்சாத்தான மூன்ருவது ஆண்டு நிறைவையொட்டி இந்தப் புது யோசனையை இந்தியா தெரிவித்துள்ளது. இந்தியாவின் யோசனை புதுடில்லியிலுள்ள பாகிஸ்தான் ஹைகமிஷனரிடம் கொடுக்கப்பட்டது.

### கொஸிஜின் கருத்து

தாஷ்கண்ட் பிரகடனத்தின் 3-வதுஆண்டுநிறைவையொட்டி மாஸ்கோவிலுள்ள இந்திய ஹைகமிஷன் ஒரு விருந்து வைபவத்தை நடத்தியது.

ரஷ்யப் பிரதம மந்திரி திரு. கொஸிஜின் இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்திக்கு அனுப்பிய ஒரு செய்தியில் இருநாடுகளுக்குமிடையேயான நெருக்கமான உறவுகளுக்கு இந்தப்பிரகடனம் வழிவகுக்கிறது. என்று குறிப்பிட்டுள்ளார்.

### சீஞவுடன் நட்பு

சீஞவுடன் இந்தியா நட்புறவை பலப்படுத்திக் கொள்ளவே விரும்புகிறது என்று பாரதப் பிரதமர் திருமதிஇந்திராகாந்தி லண்டனில் கூறியுள்ளார். பத்திரிகை நிருபர்கள் கூட்டமொன்றில் அவர் பேசிஞர். பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையிலுள்ள பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ள இருதரப்புஅமைப்பொன்று நிறுவப்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

—

### கிளிநொச்சி நகர் நிர்மாணம்

கிளிநொச்சி, சனி

கிளிநொச்சிக்கு நகர் நிர்மாணப்பகுதியை நிரந்தர அலுவலம் அமைத்து கிளிநொச்சி நகரநிர்மாணத்திற்குவிரைவில் நடவடிக்கை எடுக்குமாறு கிளிநொச்சி எம். பி. கேட்டுக்கொண்டுள்ளார். இதற்குத் தலைமைப் பீடம் இரு கிழமைக்குள் நடவடிக்கை எடுக்க இசைந்துள்ளது.

### பூட்டோ விசாரணை

கராச்சி, ஜன. 11

அரசாங்கத்துக்கு எதிராகப் பிரசாரம் செய்துநாட்டு மக்களையும் குறிப்பாக கல்லூரி மாணவர்களையும் கிளர்ச்சி செய்யத் தூண்டியதாகக் குற்றம் சாட்டப்பட்டு அவசரகாலச் சட்டத்தின்கீழ் சென்ற வருடம் நவம்பர் மாதம் பாதுகாப்பில் வைக்கப்பட்ட பாகிஸ்தான் முன்னைநாள் வெளிநாட்டு மந்திரி ஜஞப் ஸுல்பிகார் அலி பூட்டோவின் வழக்கு மேற்கு பாகிஸ்தான் உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

—

### கிளிநொச்சி பஸ்சேவை சீராகும்

கிளிநொச்சி, சனி

கிளிநொச்சி இ. போ. ச. நிலையத்தை விரிவாக்கவும் முளங்காவில், கிளாலி, விஸ்வமடுக்குளம், வன்னேரிக்குளம் ஆகியவற்றிற்குப் புதிதாக பஸ்சேவை ஆரம்பிக்கவும், இதற்குக் கூடுதலான பஸ்களைக் கிளிநொச்சி பஸ் நிலையத்திற்கு அனுப்பவும் கிளிநொச்சிப் பட்டின சேவைக்குப் பிரத்தியேக பஸ் சேவை நடவடிக்கை எடுப்பதாக இ. போ. ச. தலைவர், பண்டிதர் இரத்தினத்திற்கு நேரில் உறுதியளித்துள்ளார். கிளிநொச்சிப் பஸ்சேவைச் சிர்கேடுகளை நேரில் பண்டிதர் அறிவித்தபோதே தலைவர் மேற்கண்டவாறு உறுதியளித்துள்ளார்.

### இடநெருக்கடி தீர்க்கப்படும்

வல்வெட்டித்துறைசனி

பருத்தித்துறை ஆட்சி மன்ற தொகுதியிலுள்ள வல்வெட்டித்துறை, பருத்தித்துறை பகுதிகளிலுள்ள சிலபாடசாலைகளில் இடநெருக்கடி இருந்து வருவதாக பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் கல்வியமைச்சருக்கு செய்துகொண்ட புகாரைத் தொடர்ந்து இடநெருக்கடியுள்ள பாடசாலைகளை வடபகுதி உதவி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் எம். பி. யின் உதவியுடன் அப்பாடசாலைகளை சென்று பார்வையிட்டு அவற்றைதவிர்த்துக் கொள்வதற்கான ஆலோசனைகளை பெற்றுச் சென்றுள்ளார்.

### உள்ளூராட்சி அமைச்சர் உறுதி

கிளிநொச்சி, சனி

கிளிநொச்சிப் பட்டின சபை இயங்கத் தொடங்கியபின் கரைச்சிக் கிராமச் சபை இருகிராமச்சபைகளாகப் பிரிந்து இயங்க நடவடிக்கை விரைவாக எடுக்கப்பட்டு வருகின்றது. இவற்றை விரைவில் பிரித்துதவுவதாக உள்ளூராட்சி அமைச்சர் கிளிநொச்சி எம். பி. யிடம் உறுதியளித்துள்ளார்.

### நெல்லியடிக்கு நவீன சந்தை

உடுப்பிட்டி. சனி

நெல்லியடிப் பட்டின சந்தை விரைவில் திறந்து வைக்கப் படவிருக்கிறது. சுமார் 44,000 ரூபா செலவில் இந்த நவீன சந்தைக் கட்டிடம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நவீன சந்தை நான்கு வாசல்களைக் கொண்டுள்ளது. மரக்கறிச் சந்தை மீன்சந்தை ஆகிய இருபிரிவுகளாகப் புதிய சந்தைக் கட்டிடம் பிரிக்கப்பட்டுள்ளது. மீன்சந்தைக்கான கட்டிடத்தில் இறைச்சிக் கடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

இறை பக்தியை வளர்க்காத கல்வியால் அதிக பயனில்லை. பக்தியை மாணவர் மத்தியில் பரப்பக் கூடிய கல்வியே எதிர்காலத்தில் அவர்களது வாழ்வு சிறக்க வழிகோலுவதாக இருக்கும்.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram "EELANADU" Jaffna.
Post Box 49, Jaffna Telephone 389

யாழ்ப்பாணம், கீலக வருஷம் மார்கழி மாதம் 29-ந் திகதி
( 12 - 1 - 69 )


## இராணுவமும் கள்ளக்கடத்தலும்

வட பகுதிக்கு ஒரு நாளில் வந்து திரும்பிய இலங்கை இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சேபால அட்டிகல, அந்த ஒரு நாள் விஜயத்தில் பெரிய ஒரு விஷயத்தைக் கண்டு பிடித்திருக்கிறார். வடபகுதியில் இராணுவத் தாக்குதல் பற்றிச் செய்யப்படும் புகார்கள் கள்ளக் கடத்தலுக்காகச் செய்யப்படும் சூழ்ச்சி யென்றும் இந்தச் சூழ்ச்சிக்கு சில எம்.பி.க்களும் இடமளித்து விடுகின்றன ரென்றும் இராணுவத் தளபதி தெரிவித்து தமது 'கண்டு பிடிப்பை' வெளியிட்டிருக்கிறார்.

கள்ளக் கடத்தலையும் சட்டவிரோதக் குடியேற்றத்தையும் தடுக்கவே வேண்டும் இந்த இரண்டும் தேசவிரோதநடவடிக்கைகள். இவற்றைத் தடுக்கக் கூடாது என்று யாரும் சொல்லவில்லை. வடபகுதி ஆட்சிமன்றப் பிரதிநிதிகள் எவரும் கள்ளக் கடத்தலையும் சட்டவிரோதக் குடியேற்றத்தையும் தடுக்கக் கூடாதென்று ஒரு போதும் சொன்னதில்லை.

வடபகுதிக் கரையோரப் பகுதியில் இராணுவம், கடற்படை, பொலிஸ்படை ஆகியவைகளுடன் கள்ளக்கடத்தலைத் தடுக்க சுங்கப் பகுதியினரும் இருக்கின்றனர். இந்தப் படைகளுக்காக மாதாமாதம் பெருந்தொகைப் பணம் செலவிடப்படுகிறது. கள்ளக் கடத்தலைக் கண்டு பிடிக்கும் உத்தியோகத்தர்களுக்கு 'சன்மானம்' வேறு கிடைக்கிறது. இந்திய இலங்கை அரசாங்கங்களின் கூட்டுநடவடிக்கை மூலம் இப்போது சட்ட விரோதக் குடியேற்றம் குறைந்திருக்கிறது. ஆனால் கள்ளக்கடத்தலை இந்தப் 'படைகள்' தடுத்துவிட்டனவா? தினமும் கடையிலும் வீடுகளிலும் சோதனை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. கள்ளக் கடத்தல் பொருள்கள் என்று சில கைப்பற்றப்படுகின்றன. கரையோரப்பகுதிகளில் கள்ளக்கடத்தலைத் தடுக்க நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் படைகள் இவற்றை ஏன் தடுக்கவில்லை? கள்ளக் கடத்தலில் ஈடுபடுவோருக்கும் 'காவற்படையினருக்கும்' 'உறவும் தொடர்பும்' இருப்பதாக நிலவும் வதந்தியில் உண்மை இருக்கிறதா? கள்ளக்கடத்தலில் ஈடுபடுவோரைவிடுத்து தாங்களும் ஏதோ செய்வதாகக் காட்டிக்கொள்வதற்காக ஒன்றுமறியாத அப்பாவிப் பொதுமக்களை இராணுவத்தினர் தாக்குகிறார்கள் என்று கூறப்படுவதில் உண்மை இருக்கிறதா அல்லது இராணுவத் தளபதி கண்டு பிடித்திருப்பது போல, இராணுவத் தாக்குதல் என்பது கள்ளக்கடத்தல்காரரின் சூழ்ச்சிதானா?

இவற்றை ஆராய்ந்தால் கள்ளக்கடத்தலைத் தடுக்கவும் இராணுவத்தினரின் நடத்தையை அறிந்து திருத்தவும் உதவும். பருத்தித்துறைப் பிரதிநிதி கூறுவதுபோல இராணுவத்தினரின் நடத்தையையும் கள்ளக்கடத்தல் பற்றியும் ஆராயபாரபட்சமற்ற ஒரு விசாரணைக் கமிஷனை நியமிப்பது பலவிதத்திலும் பயனளிக்கும். இந்த விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட வேண்டுமென ஆட்சிமன்றத்திலும் நமது பிரதிநிதிகள் வற்புறுத்தவேண்டும்.

## மற்றுமொரு அணுஆயுத அரசு?

இஸ்ரேல் அணு ஆயுதம் தயாரித்து வைத்திருக்கிறது, அல்லது விரைவில் அணு ஆயுதம் தயாரிக்கும் என்று ஒரு செய்தி வெளியானதும் அதை அமெரிக்காவிலுள்ள இஸ்ரேலிய தூதர் மறுத்திருக்கிறார். அந்தச் செய்தியை வெளியிட்ட அமெரிக்க தேசிய ஒலிபரப்புக்கூட்டு ஸ்தாபனத்தின் மீது அமெரிக்க ராஜாங்க இலாகா குறைகூறியிருக்கிறது. ஆனாலும் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதற்கு மட்டும் தேவையான சில மூலப் பொருள்களை இஸ்ரேல் அமெரிக்காவில் வாங்கியிருப்பதாகவும், அணு ஆயுதம் தயாரிப்பதற்கான தொழில்நுட்ப முறைகள் இஸ்ரேல் விஞ்ஞானிகளுக்குத் தெரியுமென்றும் அமெரிக்க அதிகாரிகள் சிலர் தெரிவித்திருக்கின்றனர்.

இஸ்ரேலின் சமீபகால நடவடிக்கைகள் இஸ்ரேலிடம் சக்திவாய்ந்த ஆயுதங்கள் இருக்கின்றன என்ற யூகத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இஸ்ரேலியர் அணுஆயுதம் உற்பத்தி செய்திருக்க வேண்டும் அல்லது அணு ஆயுத உற்பத்தியிலீடுபட்டிருக்கவேண்டுமென்ற ஊகம் தவறாக இருப்பதற்கில்லை. அமெரிக்காவும் சோவியத்யூனியனும் அணுஆயுதங்களை பெருமளவில் உற்பத்திசெய்து, பரீட்சித்துப் பார்த்து குவித்து வைத்துக் கொண்டு, அணுஆயுதங்களை உற்பத்திசெய்யக் கூடாதென்றும் அணு ஆயுதங்கள் பரவக்கூடாதென்றும் உபதேசம் செய்கின்றன. இதற்கு பிரான்சும், சீனாவும் செவிசாய்க்கவில்லை. இஸ்ரேலியரும் அணுஆயுதங்களை உற்பத்தி செய்யத் தொடங்கினால், இஸ்ரேலிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காக அரபுநாடுகளும் அணுஆயுத உற்பத்தியில் இறங்கவேண்டும் அல்லது அணுஅயுதங்களை வாங்க வேண்டும்.

உலகின் முன்னேற்றத்துக்கும் மக்கள் சந்தோஷமாகவும் சுபீட்சத்துடனும் வாழ்வதற்கு ஆக்கரீதியான காரியங்களில் ஈடுபட வேண்டிய உலக நாடுகள், மக்களின் உணவுக்கும் மற்றும் தேவைக்கும் செலவிடக்கூடிய பெருந்தொகைப் பணத்தை மக்களை அழிக்கும் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதற்குச் செலவிடவேண்டுமா? இதற்காக சீனா, பிரான்ஸ், இஸ்ரேல் ஆகிய நாடுகளை மட்டும் குறை சொல்வதற்கோ அவர்கள் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யத் தடைவிதிக்க வேண்டுமென்றோ கூறுவதிலோ அர்த்தமில்லை. இஸ்ரேலும் அணுவல்லரசானால் ஒரே சமயத்தில் உலகம் முழுவதும் அழியக்கூடிய முறையில் உலகின் சகல திசைகளிலும் அணு ஆயுத அரசுகள் இருக்கின்றன என்ற நிலை ஏற்படும்.

இஸ்ரேலானாலும்சரிஅல்லது வேறு எந்த நாடானாலும் சரி அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யாமல் தடுக்கவும் அணு ஆயுதங்கள் பரவாமல் தடுக்கவும் வேண்டுமானால் அணு ஆயுதங்களை உற்பத்திசெய்து குவித்து வைத்திருக்கும் அமெரிக்காவும் சோவியத் யூனியனும் அந்த ஆயுதங்களை அழித்து விடவேண்டும் அல்லது அவற்றை ஐ.நா.வின் பொறுப்பில் ஒப்படைத்து விடவேண்டும். இப்படித்தான் அணு ஆயுதத் தடைக்கு வழிகாட்ட முடியுமே தவிர ஆயுதங்களை வைத்துக்கொண்டு வேறுயாரும் உற்பத்தி செய்யக்கூடாது என்று [illegible]

அவர்கள் பார்வையில்

# பண்புள்ள மனிதன் செய்யும் செயல் அல்ல

## தேவாலய தாக்குதல்பற்றி 'ஜனதின' வெளியிட்டகருத்து

யாழ்ப்பாணம் சென்ற் ஜேம்ஸ் தேவாலயத்தில் நடைபெற்ற பொலிஸ் தாக்குதல்பற்றி விசாரணை நடத்துமாறு பிரதம மந்திரி கட்டளையிட்டுள்ளார். பலாத்காரமாக ஒரு தேவாலயத்தினுள் நுழைந்து அங்கு பிரார்த்தனையில் ஈடுபட்டுள்ள மக்களைத் தாக்குவது பெரும் குற்றச் செயலாகும். வழிபடும் இடத்தினுள் ஒருகுற்றவாளியைத்தானும் ஒரு பண்புள்ள மனிதன் தாக்கமாட்டான். தங்களுக்குக்கீழ் பணிபுரியும் பொலிசாரை தேவாலயத்தினுள் ஆராதனையில் ஈடுபட்டிருந்தமக்களை அவர்கள் தாக்கும்படிவிட்டுவிட்டு உதவிப்பொலிஸ் சுப்பிரீண்டனும், இன்ஸ்பெக்டரும் மௌனமாகவிருந்தது ஏன்? இந்நாட்டு மக்களின் வழக்கப்படி கோவிலுக்குள்ளோ, தேவாலயத்துக்குள்ளோஅல்லது வழிபடும் எந்த இடத்தினுள்ளோசெல்லும்பொழுது ஒருவர் மரியாதையுடனே யேசெல்லவேண்டும். ஆத்திர மூட்டக்கூடிய எந்த சந்தர்ப்பத்திலும் பொலிஸ்அதிகாரிகள் நிலைமையை பொறுமையாகவும் புத்திசாலித்தனமாகவும் சமாளிக்க வேண்டும். இந்தச் சம்பவத்தில் குற்றம் புரிந்தவர்களுக்குத் தகுந்த தண்டனை அளிக்கப்படும் என நாம் நம்புகிறோம்'' என்று 'ஜனதா' சிங்கள தினசரி டிசம்பர் 28-ம் தேதி ஆசிரிய தலையங்கம் வெளியிட்டுள்ளது.

### விவசாயிகளின் உரிமைகள்

அரசாங்கம் விமான மூலம் விவசாயிகளை இந்தியாவுக்கு அனுப்பியிருந்தாலும் இங்கு இவ் விவசாயிகளுக்குத் தோட்டத் தொழிலாளர் அனுபவிக்கும் உரிமைகள் கூடஇல்லை. என்று விவசாயிகள் முன்னணித் தலைவர் திரு. ஹேமா பசநாயக்கா பத்துவன்துடாவவில் நடைபெற்ற கூட்டமொன்றில் கூறியதாக டிசம்பர் 29-ல் வெளியான 'தவச' பத்திரிகை செய்தி யொன்று கூறுகிறது.

### பிரதமர் தொகுதியில் நாம் தமிழர்

''ஐம்பதுக்கும் மேலான 'நாம் தமிழர் இயக்கத்'தின் கிளைகள் பிரதம மந்திரியின் தொகுதியான 'டெடிகமப் பகுதியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதை இரகசியப்பொலிஸ் கண்டுபிடித்துள்ளது'' என 'ஜனதின' பத்திரிகை தனது டிசம்பர் 29-ம் திகதிய இதழில் வெளியிட்டிக்கின்றது.

### மந்திரிகளைவிட பிக்குகளால் முடியும்

''இன்று நாட்டையும் சமயத்தையும் எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளால் புத்த குருமார்களும் அரசியலில் கட்டாயமாக ஈடுபடவேண்டிய தேவையேற்பட்டுள்ளது. மந்திரிகளும் ஆட்சிமன்ற அங்கத்தவர்களும் செய்வதைவிடச் சிறந்த சேவையை நாட்டுக்கு புத்த குருமார்களால் செய்யமுடியும்'' இவ்வாறு வண டாக்டர் இரத்மலே சதானந்த தேரோ பிரஹ்மனுயகமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்தார் என்ற இச்செய்தியை 'ஜனதின்' தினசரி டிசம்பர் 29-ல் வெளியிட்டுள்ளது.

### ஐ. ஆர்.-8 ஆபத்து

'அமெரிக்க விதை நெல் ஐ. ஆர்.-8 கொடிய விஷ நோயை பரப்பியதால் பல ஏக்கர்நெல்வயல்கள்அழிந்து போயின என அறிவிக்கப்பட்டுள்ளது என்று டிசம்பர் மாதம் 30-ம் தேதி வெளியான 'சிறிலக' பத்திரிகை செய்தி கூறுகிறது.

### கையாட்களுக்கு கடாட்சம்

உள்நாட்டமைச்சர் டாக்டர் டபிள்யூ. தகநாயக்கா நேர்முகப்பரீட்சையின்றியே தனது கையாட்கள் இருவருக்கு நெசவு நிலையங்களின் மனேஜர் பதவிகளைக் கொடுப்பதற்காக இப்பதவிகளை நிரப்புவதற்காக நடைபெறவிருந்த நேர்முகப் பரீட்சையை ரத்துச் செய்துள்ளனர். உள்நாட்டு மந்திரியின் அதிகாரத்தின் கீழுள்ள சிறு கைத்தொழில் அமைச்சின் அதிகாரத்திலுள்ள இந் நெசவு நிலையங்களுக்கான மனேஜர்களை தெரிவு செய்வதற்கென நேர்முகப் பரீட்சை 17-ம் திகதி நடைபெறவிருந்தது. இந்த நேர்முகப் பரீட்சைக்குப் பலர் தோற்ற விருந்தனர், ஆனால் உள்நாட்டமைச்சர் அதை ரத்துச் செய்யும்படிகடிதமூலம் 9-ம் திகதி அறிவித்தார். இவ்வாறு டிசம்பர் 30-ல் வெளியான 'அத்த' தலையங்கம் தீட்டியுள்ளது. அன்று அத்தவில் வெளியான தலையங்கம் பின்வருமாறு:-

உள்நாட்டமைச்சர் நடைமுறைக்கு மாறாகத் தனது ஆதரவாளர்கள் இருவருக்கு உத்தியோகம் அளித்ததையிட்டு பொதுமக்கள் கவனம் செலுத்த வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

எங்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுப்மார்கள் என்ற பயத்தினால் இச் செயலை மிகக் கீழ்த்தரமான செயல்' என நாங்கள் கூறவில்லை. இத்தகைய செயல்களுக்குத் தகுந்த பெயரை இடுமாறு சிங்களக் கல்வியில் சிறந்தஅறிவு பெற்ற கல்விமான்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

7 கட்சிகளின் கூட்டரசாங்கம் ஆட்சிக்கு வந்ததில் இருந்து அரசாங்கத்திலோ அல்லது கூட்டுஸ்தாபனங்களிலோ உள்ள உத்தியோகங்கள் யாவும் மந்திரிகளோடு தொடர்பானவர்களுக்கும் ஆட்சி என்ற உறுப்பினர்களோடு தொடர்பானவர்களுக்குமே அளிக்கப்பட்டன. நாங்கள் காலங்துக்குகாலம் இத்தகைய சந்தர்ப்பங்களை தக்க அத்தாட்சிகளுடன் பிரசுரித்துள்ளோம். இந்த எலலா இழிவான செயல்களுக்கும் முடிசூட்டியது போல் இப்பொழுது நடந்த செயல் உள்ளது. இதற்கு முன்னர் அரசாங்கம் சட்டத்தின்படி நடப்பதாகவாவது பாசாங்கு செய்தது மந்திரியின் கட்டளைப்படி ஒருவர் முன்னர் நியமிக்கப்பட்டாலும் மற்ற எல்லா விண்ணப்பதாரிகளுக்கும் நேர்முகப் பரீட்சை நடைபெற்றது இத்தகைய திருட்டுத்தனமான அலுவல்கள் யாவும் திடீரென வெளிவந்து விடாது. ஆனால் இந்த அளவுக்காவது கள்ளத்தை மறைக்க ஒன்றும் செய்யப்படவில்லை. டாக்டர் தகநாயகாவின் உத்தரவே இத்தகைய செயல்களுக்கு முக்கிய எடுத்துக் காட்டாகும்.

### கூட்டுக்கு எதிர்ப்பு

அடுத்த பொதுத்தேர்தலில் லங்கா சமசமாஜக் கட்சி 38 ஸ்தானங்களில் போட்டியிட விரும்புவதை பல ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிமன்ற அங்கத்தவர்கள் எதிர்க்கின்றனர். சுதந்திரக்கட்சி கூட்டுமுன்னணியாகவில்லாது தனிக் கட்சியாகவே போட்டியிட வேண்டுமென அவர்கள் கோரவிருக்கிறார்கள். 'ஜனதா' இச் செய்தியை டிசம்பர் 30-ல் வெளியிட்டுள்ளது,

பல வருடங்களாக இலங்கையில் இருக்கும் கள்ளக் குடியேற்ற வாசிகளில் பலர் தென் மாகாணத்திலுள்ள ரப்பர் தோட்டங்களில் குடியேறி இவர்கள் சிங்களப் பெண்மணிகளை மணந்துமுள்ளார்கள். இலங்கையில் ஒரு தமிழ்அரசை நிறுவ சமஷ்டிக் கட்சியினருக்கு ஆதரவளிப்பவர்களாகவும் இவர்கள் உள்ளனர் என்ற செய்தியை 'சிறிலக்க' டிசம்பர் 31-ல் வெளியிட்டுள்ளது.

———

## வேண்டுகோள் பயனளித்தது

உடுப்பிட்டி, சனி

நெல்லியடிப் பட்டினப் பொது மக்களின் வேண்டுகோள் பயன் அளித்துள்ளது. இதுவரை மாலை 6 மணியுடன் பூட்டப்பட்டு வந்த நெல்லியடிப் பட்டின பொது நூல் நிலையம் இம் மாதம் முதல் இரவு 8 மணிவரை திறந்து வைக்கப்பட்டிருக்குமென நூல் நிலையப் பொறுப்பாளர் திரு. கணேசானந்தம் அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...து மணிகளில் ஒரு மணி ...ல்லை ஆறுமுகநாவலர்

## திருவையாற்றில் ...ருபானந்த வாரியார்

சென்னை, ஜன. 10

...சுவாமிகள் திருவையாற்றில் தோன்றி ...தபொழிந்து கொண்டிருந்த காலத்தில் ... ஆறுமுக நாவலர் தோன்றிஅருந்தொண் ...டிருந்தார் என்பதை திரு முருககிருபான ... திருவையாற்றில் நடைபெறும் தியாக ... 122வது விழாவில் குறிப்பிட்டார்.

...றில் புதன் ...டக்கும் ஸ்ரீ ... சங்கீத ...ட பெற்று ...

...றில் பஞ்ச ...தில் தியாகப் ...மாதிக்குமுன் ... பந்தலில் ...ழாவில் 2-ம் ...யில் கலந்து ...ய தி...ருக ...ாரியா...மேற் ...டு கோளை ...

...ம் பேசுகை ...வது:-

...பாது 20-ம் ...ாழ்கின்றோம் ...களுக்கு முன்பு ...டில் வாழ்ந்த ...கு விழா எடு ...ந்தனை லட்சம் ...யிருப்பது ...ய்வசக்தியை ...து.

... வரும்போது ...திகாரிகளும், ... ரயில் அதிகா ...ார்கள். அதே ...ல் நீதிவழு...வப்பட்ட போது இறைவன் வருவார். அல்லது அவருடன் அருள் பூண்டவர்கள் வருவார். இதே போலத்தான் உலகில் நீதியை நிலைநாட்ட தியாகராஜர் அன்று உலகில் தோன்றினார்.

நூறு வருடங்களுக்குமுன் 14 உலகிலும் 10 மணிகள் (ஞானிகள்) தோன்றிச் சேவை செய்தனர். இஞ்ஞானிகளில் இலங்கையில் தோன்றியவர் ஆறுமுகநாவலர் சென்னையில் சுப்பிரமணிய தேசிகம், மயூரத்தில் வேதநாயகம் பிள்ளையும் தோன்றினார்கள். இவர்களில் தியாகராஜர் நடுநாயகமாகவும் விளங்கினார்.

ஒரே அருள் மயமான தியாகராஜர் இன்னும் மறையவில்லை இப்பொழுதும் உலகில் நிறைந்திருக்கிறார். பாம்பன் சுவாமி முருகனைக் கண்டார். நேராகவே கண்டு அதேபோல் தியாகராஜரும் இராமச்சந்திரமூர்த்தியைக் கண்டார். நேராகவே கண்டு பூசித்தார். தியாகராஜர்தான் இராமச்சந்திரமூர்த்தியைக் கண்டதாக வாக்குக் கூறினர். இறைவன் வாக்குப் பிழைத்தாலும் அடியார் வாக்குப் பிழைக்காது. ஆதலினுல் அடியாரான தியாகராசரின் வாக்கும் உண்மை. அவர் இராமச்சந்திரமூர்த்தியை கண்டார்.

பாடலாம், பிரசங்கம் செய்யலாம் கான மழை பொழியலாம், ஆனுல் தியாக புத்தியை பெற முடியாது. சிவனிடம்தான் இத்தியாக புத்தி உண்டு.

மிதுலையில் சீதையக் கைப்பிடிக்க அங்கு இருந்த வில்லை எடுத்து மச்சத்தை வீழ்த்திஞல்தான் முடியும்.

அரசர்கள் எல்லோரும் சென்று வில் வளைக்க முடியாமல் மீண்டபோது இராமன் சென்றூர், இராமன் வில்லை எடுத்து குருவைப் பார்த்தபடி நிற்கிறூர். அப்போது மாணவர்கள் குருவுக்குப் பணிந்திருந்த காலம். குரு தலை அசைத்தார்.

சிவன், கங்கன் என்ற அசுரனை கொன்றதால் கரகரப் பிரியா இராகம் உண்டானது. இது தற்போது 22-வது மேளகர்த்தாவாக விளங்குகிறது.

பிரமச்சாரியாக இருந்த தியாகராஜர் சுவாதித் திருநாள் அரசன் வரும்படி கட்டளைஇட்ட போதுமூன்று ஆசைகளையும் துறந்த எனக்கு அங்கு வேலையில்லை யென்றுமறுத்துவிட்டார்.

5லட்சம்ரூபா செலவழித்து 5000 வாக்குப் பெற்றுமெம்பராகிறூர்கள். அது பெருமையா, அல்லது உலகம் வாழத் தோன்றிய மகானுகிய தியாகராஜருக்கு மண்டபம் அமைப்பது பெருமையா? என்று சிந்திக்க வேண்டும்.

தாஜ்மகால் உலகம்போற்றும் அதிசயமாக விளங்குகிறது. இதே போல் தியாகராஜருக்கு இந்த திருவையாற்றில்உலகப்புகழ் பெறத்தக்க கலாஷேத்திரம் அமைக்கவேண்டும். அக்கலாஷேத்திரத்தை நானே அமைத்து விடுவேன். ஆனுல் இங்கு கூடியிருக்கும் மக்கள் அதை ஆட்ஷேபிப்பார்கள், எனவே தியாகராஜருக்கு திருவையாற்றில் ஒரு கலாஷேத்திரம் அமைக்கவேண்டும்.

உலகத்தில் எத்தனை வேற்றுமை உண்டானுலும் சமரசப்படுத்தும் தன்மை இசைக்கு உண்டு. சிலர் கோயில்களை வெறுத்தாலும் அதில் நிகழும் இசையை வெறுப்பதில்லை. சமணர்கள் இசையைஅழிக்க முற்பட்டபோது சம்பந்தர் தோன்றி இசையாலே பாடி இசைவளர்த்தார்.

[அள. நிருபர்]

## 'நாட்டின் நலனுக்கு வாலிபர்படை தேவை'

வட்டுக்கோட்டை, சனி

'நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு உழைக்கக் கூடிய வாலிபர் படையொன்று உருவாகவேண்டும். இப்படையின் அடிப்படை நோக்கங்கள் நாட்டின் ஐக்கியம், மதபேதமற்ற நிலை, ஜனநாயக பாதுகாப்பு, சர்வதேச சமாதானம் ஆகியவைகளாக இருக்கவேண்டும். இப்படையினர் கிராமங்களுக்குச் சென்று கிராம மக்களுக்கு சேவை செய்யவேண்டும்.'

இவ்வாறு பாரத சர்வோதய இயக்கத் தலைவரான திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் மாணவர் மத்தியில் நேற்று உரை நிகழ்த்துகையில் எடுத்துக் கூறினர்.

திரு. ஜெயப்பிரகாஷும் அவரது பாரியாரும் நேற்று யாழ்ப்பாணக்கல்லூரிக்கு காந்தி சேவா சங்கத் தொண்டர்களினுல் அழைத்து வரப்பட்டனர்.

கூட்டத்துக்குதலைமைதாங்கிய திரு. ஜெயசிங்கம் பேசுகையில் தொண்டுக்கே தம்மை அர்ப்பணித்த திரு. அரியநாயகம் பிறந்த இடம் வட்டுக்கோட்டை என்றும் அவர் கல்வி கற்ற இடம் யாழ்ப்பாணக்கல்லூரி என்றும் தெரிவித்தார்.

திரு. ஜெயப்பிரகாஷ் தொடர்ந்து பேசுகையில், இலங்கையின் நிலை பற்றி தமக்குத் தெளிவாகத் தெரியவில்லையென்றும் இந்தியாவில் தன்னியல்பு கொண்டு மக்கள் தொழிற்பட வழிகாட்டத் தவறிவிட்டோம் என்றும் தெரிவித்தார்.

## எம்.பி. கோரிக்கை ஏற்கப்பட்டது

கிளிநொச்சி, சனி

கிளிநொச்சித் தொகுதியில் உள்ள முடிக்குரிய காணிகளை ஏழை மக்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் அமைச்சரைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க கிளிநொச்சித் தொகுதியில் அடாத்தாக முதலாளிகள் நூற்றுக்கணக்கான ஏக்கர்களைப் பிடித்து வருவதைத் தடுத்து அக்காணிகளை ஏழைக் குடியேற்ற வாசிகளுக்கு வழங்கக் காணி ஆணையாளர் விரைந்து நடவடிக்கை எடுப்பதாக எம். பி.யிடம் உறுதியளித்துள்ளார்.

இதற்கென விசேஷமாகக் மாவட்டக் காணி உத்தியோகத்தர் ஒருவரும் குடியேற்ற உத்தியோகத்தர்களும் நியமிக்கப்படுவார்கள்.

## சட்டம் நிலைநாட்டப் படுகிறது

புத்தளம், சனி

புத்தளத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதில் இப்போது பொலிஸார் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். பீ. ஏ. பெரேரா மக்களை சட்டத்தை அனுசரித்து நடக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## ...றத்தாழ்வு, சுரண்டல் ...கற்றப்பட வேண்டும்'

### ...மாணவர்களை முன்வருமாறு ...ஜயபிரகாஷ் வேண்டுகோள்

...வெட்டி, சனி ... தனிமனித ...த்துக்கு பாடு ...ி இளைஞர் ...ர்த்து இந்தி ...ந்திரம் பெற் ... ஆனுல் இன்று ... காந்திஜியின் ...த்துவத்துக்கு ...ம்பி நிற்கிறூர் ...ர்களின் திருப் ...நோக்கித்தான் ...வதேச இயக் ...ருகிறது'' என ...ாதய இயக் ... திரு. ஜெயப் ...ாயண் நேற்று ...ிப்பளை மகா ...ி மண்டபத் ...ற்ற காந்தி ...ிழாவில் பேசு ...ஞர்.

...ணவிகள் கூட் ..., கிராம அபி ...ங்கங்களினதும் ...ணிகளினதும் ... ஆகியோர் ...ண்ட இக்கூட் ...லூரி அதிபர் ... ஜெயரத்தி ...வகித்தார்.

... ப்பிரகாஷ் ...கையில் கூறிய ...

...ன் கொள்கை ...யில் மாத்திர...மல்ல சுதந்திரம் பெற்ற நாடுகளில் எல்லாம் பின்பற்றப்பட்டுவருகின்றன. இந்நாடுகளில் காந்திஜியின் கொள்கைகளின்படி இயங்கும் இயக்கங்களை கட்டி வளர்த்து சமுதாயத்திலுள்ள ஏற்றத்தாழ்வு, சுரண்டல் என்பனவற்றை அகற்ற மக்கள் அனைவரும் முன்வர வேண்டும். இந்து தர்மம் சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகளை அங்கீகரிக்கவில்லை.

கிராமங்கள் புனர்வாழ்வு பெற்றுல்தான் நாடு முன்னேற முடியும். இக்காரணத்திஞலேயே காந்திஜி கிராமங்களின் புனர்வாழ்வுக்காக தன்வாழ்க்கையையே அர்ப்பணித்து வாழ்ந்து வந்தார்.

நாமும் அவரின் கொள்கைகளை பின்பற்றி முதலில் கிராமங்களை புனரமைப்பு செய்யவேண்டும்.

இந்தியாவில் மா சே துங் இயக்கம்ஒருபுறமும்காந்திஜியின் சீடர் விஞேபாஜியின் இயக்கம் இன்னெரு புறமும் ஏற்பட்டு இளைஞர் மத்தியில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. இதில்விஞேபாஜி கையாண்டக் சர்வோதய இயக்கமே முன்னேறிவருகிறது.

ஒருநாட்டை முன்னேற்ற இளைஞர் இயக்கங்களே வழி வகுக்கும். ஆகவே இளைஞர் சமுதாயம் ஏற்றுக்கொண்டுள்ள காந்திஜியின் சர்வோதய இயக்கத்தை இந்நாட்டிலும் கைக்கொண்டு மக்கள் மத்தியில் சுயநிர்ணய உணர்வு எழ இளைஞர்கள் பாடுபடவேண்டும்.

காந்திஜி நூற்றுண்டுவிழா கொண்டாடும் இந்நேரத்தில் இளைஞர்கள் காந்திஜி பற்றி எவ்வளவு கற்றுக் கொள்ளமுடியுமோ அவ்வளவு நூல்நிலையங்களுக்குச் சென்று கற்றுக்கொள்ள வேண்டும்.

இந்திய இளைஞர் சமாதானக்குழு, பாரசீய காந்தி சேனை என்பன உருவாகியது பீகாரில் கடும் பஞ்சம் உண்டானபோதுதான். ஆகவே உலகில் எல்லா இளைஞர்களும் கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது பசிக்கும் பட்டினிக்கும் இடையில் உழைத்தார்கள். இதை அவதானித்ததால்தான் இதுபோன்று இயக்கம் எம்மத்தியில் தேவை என நினைத்தேன். ஆகவேதான் இந்த இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

## ஊர்காவற்றுறை செய்திகள்

-நமது ஊர்காவற்றுறைநிருபர்-

### புதிய நியமனம்

ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலையின் பிரதம டாக்டராக கடமையாற்றிய டாக்டர் ஜே. சி. துரைசிங்கம் விளையாட்டு இலாகா உலவி அதிகாரியாக நியமனம் பெற்றுள்ளார்.

### இலவச புத்தகங்கள்

புங்குடுதீவு கிராம சபையினர் புங்குடுதீவு கிழக்குப் பகுதியில் உள்ள பாடசாலைகளில கல்வி பயிலும் வசதி குறைந்த மாணவர்களுக்கு பாடபுத்தகங்களைச் சென்ற வாரம் விநியோகம் செய்தனர்.

### நூல்கள் நன்கொடை

புங்குடுதீவு கிராம சபையின் பொது நூல் நிலையத்திற்கு கிராம சபையின் முன்னுள் தலைவரான திரு. கு. வி. தம்பித்துரை ஜே. பி. இம்மாதம் 21-ம் திகதி நூல்களை அன்பளிப்புச் செய்வார். சுமார் ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்கள் அன்பளிப்புச் செய்யப்படும்.

### இடமாற்றம்

வல்லன் ஸ்ரீ சண்முகநாதன் வித்தியாசாலையின் [illegible] இடமாற்றம் பெற்றுள்ளார்.

## நாடும் நடப்பும்

''பனஞ்சாராயம் உற்பத்தி செய்வதற்குப் பதிலாக பனஞ்சீனி உற்பத்திசெய்வதால் எவ்வளவோ நன்மை' என்று 'ஈழநாடு' பல தடவைகளிலும் எழுதியிருந்ததைப் பார்த்து மகிழ்ந்தேன். பனஞ்சீனி மட்டுமல்ல பனம்பொருளிலிருந்து எத்தனையோ பொருள்களை இங்கு உற்பத்தி செய்யலாம். அத்தனையும் நல்ல பயனுள்ள பொருள்களாக இருக்கும். பனை வெறும் பனையல்லசார். அது ஒரு செல்வம். இந்தா பாருங்க பனைச்செல்வம்.'

அன்போடும் பண்போடும் அடக்கத்துடனும் ஆனுல் எதிலும் நம்பிக்கையுடனும் உள்ள ஒருவர்-ஒருவர்அல்ல —ஒருபெரிய தொழிற்சாலையின் முதலாளிதான் மேற்கண்டவாறு கூறி 'பனைச் செல்வத்தை' என்னிடம் கொடுத்தார். முதலாளி யென்ற மிடுக்கில்லை. எளிய தோற்றம். மலர்ந்த முகம். அவர் வழுவழுப்பான சில பொருள்களைஉற்பத்தி செய்கிறூர். அவரது பேச்சில் வழுவழுப்பில்லை. நறுக்குத் தெறித்ததுபோன்று உறுதியான பேச்சு.

அவர் யார் தெரிமா; யாழ்ப்பாணம் 'மில்க் வைற் சோப்' தொழிற்சாலை உரிமையாளர்தான் அவர். அழுக்குப்போக்கும் சோப் வாசனை சோப், சருமத்துக்கேற்ற சுகாதார சோப், மெல்லிய நைலோன், டெரிலின்போன்ற துணிகளைக் கழுவும் 'சோப்பவுடர்' முதலான பலவகை சோப்புகளைத் தயாரிக்கும் இத்தொழிற்சாலைகைத்தொழில் வளர்ச்சிக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. பலர் வேலைபார்க்கிறூர்கள். பலகுடும்பங்கள் உயிர்வாழ்கின்றன.

கூப்பன் புத்தகங்கள் கசங்கிக் கிழிந்து போகாமலும் நனையாமலும் பாதுகாப்பாக வைப்பதற்கென 'பிளாஸ்டிக்' உறை, மாணவர்கள் தங்கள் பாடநேரங்களை குறித்துவைக்க நேரசூசி, வாய்ப்பாடு அட்டை, காய்கறி வாங்கக்கூடிய சாக்குப்பை இப்படியான உபயோகமான பொருள்களையும் அத்தொழிற்சாலை அதிபர் அன்பளிப்பாக வழங்குகிறூர். இதில் வியாபாரத் தந்திரமும் இல்லாமல் இல்லை.

0 0 0

'பனைச் செல்வம்' ஒன்று தந்தார் என்று சொன்னேன் அல்லவா? அது வேறென்றுமல்ல ஒரு சஞ்சிகைதான். சென்னை மாநில பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளன வெளியீடு அது. பனம் பொருள் உற்பத்தி பற்றி பயனுள்ள அரிய விஷயங்களைத் தாங்கி வெளிவருகிறது இச்சஞ்சிகை.

தமிழ்நாடு அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் இலங்கை அரசாங்கம் இங்கு பனம்பொருள் உற்பத்தித் தொழிற்சாலையை ஆரம்பித்தால் பெரும் பயன் கிடைக்கும்; கூட்டுறவு முறையிலும் இதற்கு முயற்சி செய்யலாம். தனிப்பட்ட முறையில் பனம் பொருள் உற்பத்தி ஆலை நிறுவுவது சுலபமல்ல என்கிறூர் சோப் தொழிற்சாலை அதிபரான அவர்.

அவரது யோசனை அரசாங்கத்துக்கும் கூட்டுறவாளருக்கும் அர்ப்பணம்.

— ஊர்சுற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரிமக்கள் பிரயாண கஷ்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

பூநகரிப் பிரயாணிகள் இப்பொழுது புதுவிதமான கஷ்டத்தை அனுபவிக்க வேண்டியிருக்கிறது. இரவு நேரத்தில் யாழ்ப்பாணத்திலிருந்துபிரயாணத்தைமேற்கொள்ளும் பிரயாணிகள் அங்கு படகு தாமதிக்கும் பொழுது இருளில் சிக்க வேண்டியிருக்கிறது. கேரதீவு, சங்குப்பிட்டிக் கரைகளில் போதிய வெளிச்சம் இல்லாதிருப்பதாலேயே இவ்வித கஷ்டம் ஏற்பட்டுள்ளது.

பஸ் சேவையும் குறிப்பிட்ட நேரத்துக்கு நடைபெருதிருப்பதால் மக்கள் அவதிக்குள்ளாக வேண்டியிருக்கிறது.

பொது மராமத்துப் பகுதியினரிடம் வெளிச்சம் போடும்படி இங்குள்ள மக்கள் விடுத்திருந்த கோரிக்கை இதுவரை நிறைவேற்றப்படவில்லை. இதுசம்பந்தமாக பூநகர் சக்தி சனசமூக நிலைய தலைவர் திரு. கோ. தனபாலசிங்கம் பொதுமராமத்துப் பகுதி அதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

பூநகரி மகாதேவா பாலம்பூர்த்தியடையாதிருப்பதும் இப்பகுதி மக்களின் போக்குவரத்துக்கஷ்டத்தை அதிகரிக்கச்செய்துள்ளது. இப்பாலம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டு ஒன்றரை வருடமாகியும் இன்னமும் அரைமைல் நீளமே கட்டப்படவேண்டிய இப்பாலம் இன்னமும் பூர்த்தியாக்கப்படவில்லை. இப்பாலத்துக்கான அத்திபாரக்கல்லை போக்குவரத்து அமைச்சர் திரு. மொண்டேகு ஜயவிக்கிரமா நாட்டி வைத்தார். (ந. நி.)

# 'இயந்திரயுகம் மக்களை அடிமைப்படுத்தக்கூடாது'

## சர்வோதய இயக்க தலைவர்

நாவலப்பிட்டி, சனி

தம்மதங்கள் போதிக்கும் நல்வழிகளில் ஒவ்வொருவரும் தங்கள் பயணத்தைச் செய்வதே மேலான செயல் என்பதை உலகுக்குக் கூறி அதன்படி நடந்து உண்மை, சத்தியம் என்பவற்றின் கருப்பொருளாயமைந்தவர் மகாத்மாகாந்தி.''

இவ்வாறு நாவலப்பிட்டி கதிரேசன் குமார மகா வித்தியாலய நாமகள் மண்டபத்தில் இ. தொ. கா. ஆதரவில் நடைபெற்ற காந்தி நூற்ருண்டு விழாவில் உரையாற்றிய அகில இந்திய சர்வோதய இயக்கத் தலைவர் திரு, ஜெயப்பிரகாஷ் நாராயண் குறிப்பிட்டார்.

நகரசபைத் தலைவர் ஜனுப் எம். பதியுதீன் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

காந்தீய கொள்கைகள் பற்றி மேலும் பேசிய திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் கூறியதாவது:-

''இயந்திர யுகம் மக்களை அடிமைப்படுத்தக் கூடாது. மனிதனுக்கு அது கட்டுப்பட்டதாகவே இருக்கவேண்டும் என்பதால் தான் காந்தி எளிமை விரும்பி ராட்டை மூலம் நூல் நூற்ருர். இலங்கையையும் இந்தியாவையும் இயந்திர மோகம் அவ்வளவு பீடிக்கவில்லை.''

''மனிதன் சந்திரனைத் தொட்டு வந்துவிட்டான் என்று கூறிப் பெருமைப் படுவதை விட, ஏழ்மையில் உழலும் மக்கள் சிலரின் வறுமையைப் போக்கப்பாடுபடுவதே சிறந்த செயலாகும். சந்திரனைத் தொடும் விஞ்ஞான வளர்ச்சி இருந்தும் அது அழிவின் வழி என்பதை ஹைட்ரஜின் குண்டுபோன்ற விஞ்ஞான கண்டுபிடிப்புகள் தெளிவுறுத்துகின்றன.',

நாம் எல்லோரும் இணைந்து வாழவேண்டும். எவ்வளவோ முன்னேற்றமடைந்த பல நாடுகள் காந்தீயக் கொள்கைகளை வரவேற்பது காந்தியின் கொள்கைகளின் மதிப்பை மேலும்சிறப்படையச் செய்கிறது''.

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நெடுந்திவு கிழக்கு ஸ்ரீசுப்பிரமணியவித்தியாசாலையில் கடந்த பத்து வருடமாகத் தலைமையாசிரியராகக் கடமையாற்றிய திரு. தி. கணபதிப்பிள்ளை இவ்வருடமுதல் முதலாந் தரத் தலைமையாசிரியராகப் பதுவி உயர்வு பெற்று நயினுதீவு நாகபூஷணி வித்தியாசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## மீனவர் தப்பினர்

உடுப்பிட்டி, சனி

ஆழ்கடலில் மீன்பிடித்துக் கொண்டு கரை திரும்புகையில் கட்டுமரமொன்றுவிபத்துக்குள்ளானது. சென்ற வியாழக்கிழமைகாலை பொலிகண்டி, ஆலடிக் கடற்கரையில் இவ்விபத்து நிகழ்ந்தது.

கடலில் மீன்பிடித்துவிட்டுத் திரும்புகையில் ஆழ் கடலுக்கும் கரைக்கும் இடையிலுள்ள சுழியொன்றில்சிக்கியதாகலேயே இக் கட்டுமரம் விபத்துக்குள்ளாகியது, சுமார் நான்கு அடி உயரத்திற்கு எழும்பிய அலைகள் கட்டுமரத்தைத் தூக்கியெறியவே அதிலிருந்தமீனவர் ஒருவர் கடலுள் தூக்கி வீசப்பட்டார். மற்ற மீனவர் கட்டுமரத்துடன் அலைகளால் இழுத்துச் செல்லப்பட்டார்.

இதனைக்கண்ட கடற்கரையில்உள்ள மீனவர்கள்விரைந்து சென்று கடலுள் வீசப்பட்ட மீனவரையும், கட்டுமரத்துடன் இழுத்துச் செல்லப்பட்ட மீனவரையும் காப்பாற்றினர். கட்டுமரம் பலத்த சேதத்துடன் மிகவும் கஷ்டத்துடன் கரை சேர்க்கப்பட்டன. மீனவர்கள் இருவரும் ஆழ்கடலில் இல்லாமல் ஆழம் குறைந்த பகுதியில் விபத்துக்குள்ளானதால் தெய்வாதீனமாகஉயிர் தப்பினர்.

உடுப்பிட்டி, சனி

செங்குந்தா வித்தியாலயத்தின் 12 வருடங்கள் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. எஸ். சரவணபவான் பண்டாரவளைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். ஈழத்தின் பிரபல இலக்கிய ஏடாகத் திகழ்ந்த 'கலைச்செல்வி' ஆசிரியரான இவர் 'சிற்பி' என்ற புனைபெயரில் பலதரமான கதைகளைப் படைத்துள்ளார்.

## இன்றைய பலன்

ஞாயிற்றுக்கிழமை
(12-1-69)
மார்கழி மீ, 29 உ

திதி- நவமிஇரவு 12-52 மேல் தசமி.

நட்சத்திரம்- சித்திரை காலை 7-01 மேல் சுவாதி.

ராகுகாலம்- 5-03 — 6-33,

சுபநேரம்- 9-33 — 11-03.

இன்று பிறந்தவர்களுக்கு சிந்தனைப் புதிர்கள் திரைபோட்டு மறைக்கும். மற்றவர்களிடம் வீணுகக் குறைகேட்கும் சம்பவங்களும் ஏற்படலாம். வாக்குவாதங்களைத்தவிர்த்துக்கொள்ளவும். வீட்டில் அமைதி குன்றக்கூடும். தொழில் துறையில் மறைமுக எதிரிகள் தொல்லை கொடுப்பார்கள். எனினும் துணிச்சலுடன் செயலாற்றின் வெற்றி உமது பக்கமே இருக்கும். அன்னைவழி ஆதரவு தக்க சமயத்தில்கிடைக்கலாம். வாய்வுப் பதார்த்தங்களை நீக்கிக்கொள்ளவும். சிலர் வாழ்க்கையில் புண்ணிய ஸ்தலமொன்றுக்குப் பிரயாணம்செய்ய வேண்டிய சந்தர்ப்பமும் ஏற்படும்.

மேஷம்- அன்பு வலை, ஆனந்த நிலை.

ரிஷிபம்- பிரிவின் தாக்குதல், பின் தங்கநேரிடும்.

மிதுனம்- முயற்சி வெல்லும், முதலிட்டமுண்டு.

கடகம்- கற்றதால் பயன், கடவுள் நம்பிக்கை.

சிம்மம்- வீறுநடை போடு, வெற்றி உனக்கே.

கன்னி- தற்பெருமை, தடுமாற்றமுண்டு,

துலாம்- நலிவுக்கு இடமுண்டு, நாவடக்கம் நன்று.

விருச்சிகம்- குடும்பம் சிறக்கும், செல்வாக்குப் பெருகும்.

தனுசு- உள்வீட்டில் பூசல், உபத்திரவமிகுதி.

மகரம்-வாகனவிருத்தி, வாழ்விலும் திருப்தி,

கும்பம்- பிள்ளைப்பாசம் கொள்ளை இன்பம்.

மீனம்- விழிகள் குளமாகும். விரக்திநிலை.

சோதிடக்கலாநிதி
**திருமலை வேலுப்பிள்ளை**

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ அன் 49 மீ

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீ அன் 61 மீ

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 கானமஞ்சரி.

இரவு 6-15 பாட்டு, 6-45 பாட்டு, 7-00 மத்தாப்பு, 7-30 யூனெஸ்கோ உரைச்சித்திரம், 7-45 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 [illegible], 10-00 [illegible].

# வடமராட்சி விவசாயிகளை எதிர்நோக்கும் அபாயம்

உடுப்பிட்டி, சனி

புகையிலைக் கன்றுகளைத் தாக்கிவரும் மர்மநோயினுல் வடமராட்சி விவசாயிகள் பல ஆயிரக்கணக்கான ரூபாய் நஷ்டமடைந்துள்ளனர். புலோலி, தெருமூடிமடத்தடி, துன்னலை, கரவெட்டி முதலியபகுதிகளில் புகையிலைக் கன்றுகள் மர்மநோயினுல் நாசமாகி வருகின்றனவாம்.

மந்திகை தெருமூடிமடத்தடியிலேயே புகையிலைக் கன்றுகள் பெருமளவு இந் நோயினுல் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த நோயினுல் தோட்டம்முழுவதிலுமுள்ள புகையிலைக்கன்றுகள் பீடிக்கப்பட்டு விடுகின்றனவாம்.

# தமிழ்ப் பெயர் காப்பாற்றப்படும்

கிளிநொச்சி, சனி

இ. போ. ச. பஸ் பெயர்ப்பலகைகளில் 'தமிழ்க் கொலை' நடப்பதை கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் வன்மையாகக் கண்டித்ததைத் தொடர்ந்து இ. போ. ச. தலைவர் திரு. ஒபயசேகரா அதனை நீக்க முன்வந்துள்ளார்.

சரியான தமிழ்ப் பெயர்களைக் குறிப்பதற்குப் பொறுப்பாகத் திரு. கா. பொ. இரத்தினத்தை உதவுமாறு அவர் கோட்டுக் கொண்டுள்ளார். பிழையான பெயர்ப்பலகைகள் பொறிக்கப்படும் நிலையங்களையும் பஸ்களையும் குறிப்பிட்டு திரு. இரத்தினம் தொடர்பு கொண்டால் இனிமேல் 'தமிழ்க் கொலை' பெயர்ப் பலகைகளில் இடம் பெருது விரைந்து நடடிக்கை எடுக்கவாமெனத் தமிழ் மக்களைத் திரு. இரத்தினம் கேட்டுக் கொள்கின்ருர்.

## எந்தஏழையாலும் முடியும்

நாவலப்பிட்டி, சனி

''மகாத்மா காந்தி அன்பினுல் இந்தியமக்கள் அனைவரையும் கவர்ந்து இவ்வுலகத்தில் செயற்கரிய சாதனைகள் பல செய்துள்ளார். அவர் காட்டிய அஹிம்சை உண்மை சத்தியம் என்பவற்றைக் கடைப்பிடிக்க எந்த ஏழையாலும் முடியும். உண்மையான அன்பை எல்லோரிடமும் செலுத்த செல்வத்தன்மையை நீக்கி ஏழைகளோடு கூடிவாழ்ந்தார், அத்தகைய பெருமை பெற்ற காந்திமகானுக்கு உலகத்தில் இன,மத, பேதமின்றி விழாஎடுப்பது உலக மக்களிடையே ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சியையே காட்டுகின்றது.''

'இ. தொ. கா. ஆதரவில் அட்டன் டன்பார் மைதானத்தில் நடைபெற்ற காந்தி நூற்ருண்டு விழா வைபவத்தில் உரையாற்றிய அகில இந்திய சர்வோதய இயக்கத்தலைவர் திரு, ஜெயப்பிரகாஷ் நாராயண் மேற் கண்டவாறு குறிபிப்ட்டார். இ. தொ, கா. பிரமுகர்கள் கலந்து கொண்ட மேற்படி விழாவிற்கு செனட்சபைத் தலைவர் திரு. ஏ. ரத்னுயக்கா தலைமை தாங்கினுர்.

திரு. ஜெயப்பிரகாஷ் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

உலகத்தில் அண்மைக் காலத்தில் தோன்றிய மிகவும் உயர்ந்த மகான்களில் மகாத்மாகாந்தி சிறந்து விளங்குகிருர். அவரது கொள்கைகளை அகில உலகமும் ஏற்று நடக்கின்றது. இந்தியாவின் அண்டை நாடான இலங்கை காந்தீயக் கொள்கைகளை கடைப்பிடிப்பதில் ஆச்சரியமில்லை நம் இருநாட்டின் உறவு சரித்திர காலமுதல் ஒன்றுபட்டது.

செனட் சபைத் தலைவர் தமது உரையில் கூறியதாவது:

''புத்தர் தோன்றியபுனித இந்திய மண்ணிலே தோன்றிய காந்தி மகான் ஓர் அதிசயப் பிறவியாகும். அறப் போராட்டமூலம் சர்வதேசப் பிரச்னைகளைத் தீர்த்து வைத்த அரசியல் வாதியாவார், இவரது அமைதியான ஆத்மீகப் போராட்டத்தினுல் இந்தியா மட்டுமல்ல, அமெரிக்க, ஆசிய ஆபிரிக்க நாடுகளிலும் சுதந்திரத்தி பரவியது. அதன் மூலம் சுதந்திரம் பெற்ற நாடுகள்பலவாகும், அம் மகானுக்கு இலங்கையிலே விழா எடுப்பது புத்த வெறி நிறைந்த சந்தர்ப்பத்தில் சாலச் சிறந்ததாகும், நான் சிறுவயது முதல் ஓரளவு காந்திபக்தனுக வாழ்ந்து வருகின்றேன். எனது கருத்து மக்கள் முன்னேற்றமடையவேண்டுமாயின் அவற்றுக்கு உதவுபவை பூதான சர்வோதய இயக்கங்களே என்பதாகும்'' என்ருர்.

## யாழ்.மேயர் தெரிவு

### ச, ச நிலையம் அபிப்பிராயம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

'யாழ்நகரர்நிர்வாகத்திற்கென தெரிவு செய்யப்படவிருக்கும் புதிய மேயர், நகரத்தினது சகலதுறை வளர்ச்சிகளையும் கருத்திற் கொண்டு செயலாற்றுபவராகவும், லஞ்ச ஊழல், போட்டி மனப்பான்மைப் பதவிமோகம்: கட்சிவேறுபாடற்றவராயும், நகர உயர்வில் பாரபட்சமின்றி சேவை செய்யக்கூடியவருவாகிய'தேசியவாதி' ஒருவரை தெரிவுசெய்யுங்கள்..

இவ்வாறு ஒரு தீர்மானம் யாழ்ப்பாணம் திருக்குடும்ப சனசமூக நிலயத்தினரால் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டுள்ளது.

திரு.ஜே.ஆரோக்கியநாதர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், யாழ் புதிய மேயரை இம்மாதம் 24-ம் திகதிவரவழைத்து வரவேற்பு நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (ந. நி.)

## புதிய உறுப்பினர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

குருநகர் நெய்தல் வளர்பிறை மன்றத்தின் வருடாந்தப்பொதுக்கூட்டம் சென்ற வாரம் நடைபெற்றது.

புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. எம். மனுவேற்பிள்ளை, உபதலைவர் திரு. பி. கிறேசியன்' செயலாளர் திரு. கே. இராஜநாயகம், உப செயலாளர் திரு. ஏ. ஜெயசிலன்,பொருளாளர் திரு.கே. இராசப்பு, உபபொருளாளர் திரு. யே. யேசுரத்தினம்.

ஐந்துபேர்கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது. (ந. நி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரும்பசிட்டி உதயதாரகை இருபிரிவிலும் வென்றது

அளவெட்டி, சனி

குரும்பசிட்டி உதய தாரகை மன்றம் நடத்தும் 11-வது ஆண்டு உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நேற்று நடைபெற்ற இரு பிரிவுப் போட்டியிலும் குரும்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

குரும்பசிட்டி உதய தாரகை விளையாட்டுக் கழகத்துடன் குப்பிளான் ஜெமினி விளையாட்டுக்கழகம் 1-ம் பிரிவில் மோதிக் கொண்டது.

ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாகவும், ரசிக்கத் தககதாயும் அமைந்திருந்தது. குரும்பசிட்டி உதய தாரகை விளையாட்டுகழக வீரர்களின் விளையாட்டு பாராட்டக்கூடியதாக இருந்தது.

போட்டி ஆரம்பமாகி 5 நிமிடத்தில் உதயதாரகை கபடன் க. சத்தியமூர்த்தி முதலாவது கோலை மிகவும் சாதுரியமாகப் போட்டார். இதைத்தொடர்ந்து குப்பிளான் கோஷ்டி வீரர் கே. தளையசிங்கம் ஒரு கோலைப்போட்டார். பின்பு உதயதாரகையினர் திறமையாக ஆடி பின்பும் ஒரு கோலைபோட்டு இடைவேளையின்போது முன்னணியில் திகழ்ந்தனர். இக் கோலை செல்வேந்திரராசா போட்டார்.

இடைவேளையின் பின் போட்டி உச்சக்கட்டத்தை அடைந்தபோது உதய தாரகை வீரர் செல்வேந்திரராசா மேலும் ஒரு கோலைப் போட்டார்.

இறுதியில் 3 1 கோல்களால் உதயதாரகை எதிர்க் கோஷ்டியை தோற்கடித்தது.

இப்போட்டிக்கு திரு. க. தம்பித்துரை மத்தியஸ்தம் வகித்தார்.

ஊறணி சென். அந்தனீஸ் விளையாட்டுக் கழகமும், குரும்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக்கழகமும் 2-ம் பிரிவில் மோதியபோது உதயதாரகையே வெற்றியீட்டியது.

போட்டி ஆரம்பமாகி 7 நிமிடத்தில் ஊறணி வீரர் ஏ. புஷ்பராசா முதலாவது கோலைப்போட்டார்.

இடைவேளையின் பின் புதிய தெம்புடன் விளையாடிய உதயதாரகை கோஷ்டியினர் எதிர்க் காஷ்டியினரை திணறவைத்தனர். அடுத்து பனல்ட்டி மூலம் உதயதாரகை வீரர் சே நிர்மலநாதன் ஒரு கோலை விளாசினுர். உதய தாரகை வீரரான க. குமாரமூர்த்தியும் ஒரு கோலைப் போட்டார்.

இறுதியில் குரும்பசிட்டி உதயதாரகை 2 1 கோல்களால் எதிர்க்கோஷ்டியை தோற்கடித்தது. எம். நடனசிகாமணி மத்தியஸ்தம் வகித்தார்.

—

## இன்று மோதுகின்றன

அளவெட்டி, ஞாயிறு

மாவிட்டபுரம் ஐக்கிய விளையாட்டுக் கழகமும், ஏழாலை ஐக்கியவிளையாட்டுக் கழகமும் இன்று மோதுகின்றன.

குரும்பசிட்டி உதயதாரகை மன்றம் நடத்தும் 11-வது ஆண்டு உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின்கீழ் கட்டுவன் விளையாட்டுத்திடலில் மேற்படி இரு கோஷ்டிகளும் மோதும்.

—

## நாவலப்பிட்டியில் மார்கழி பஜனை

நாவலப்பிட்டி, சனி

நாவலப்பிட்டி ஆத்மஜோதி சமய சேவைப் பிரிவினர் நகர வீதிகளில் மார்கழி மாத பஜனைபாடி வருகின்றனர். திரு. நா. முத்தையாவின் தலைமையில் நடைபெற்று வரும் பஜனை நிகழ்ச்சிகள் தை மாதம் முதல் திகதி பொங்கல் தினத்தன்று நகர வீதியில் தோட்டப் பகுதிகளிலிருந்து வரும் பல கோஷ்டிகளோடு மாலையில் ஊர்வலமாக பஜனை பாடி செல்வார்கள்.

—

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

வல்வெட்டித்துறை, சனி

வல்வெட்டித்துறை ஹெல்வியஸ்நண்பர் விளையாட்டுக் கழகத்தாரின் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்று இம்மாதம் 16-ந் திகதி ஆரம்பமாகவிருக்கிறது. நெற்கொழு மைதானத்தில்நடைபெறவிருக்கும்இப் போட்டியில் வடமராட்சியிலுள்ள 12 கழகங்கள் பங்குபற்றுகின்றன. இப்போட்டியில் முதலிடத்தைப்பெறும் கழகத்திற்கு கதிர்காமலிங்கம் ஞாபகார்த்த வெற்றிக் கேடயமும், விசேட பரிசாக ரூபா 100வழங்கப்படவிருக்கிறது.

0 0 0

பருத்தித்துறை யுனைடெட் விளையாட்டுக் கழகம் இம்மாத இறுதியில் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை நடத்தவிருக்கிறது. பருத்தித்துறை சிவன் கோவில் முன்பாக உள்ள விளையாட்டு மைதானத்தில் இப்போட்டி நடைபெறும்.

—

## 'பயனுள்ள கல்வி பெறுவோர் குறைவு'

பம்பலப்பிட்டி, சனி

'சென்ற சில வருடங்களாக உயர்தரக் கல்வி கற்போர்களின் தொகை மிக அதிகரித்துள்ள போதும் நாட்டின் நன்மைக்குப்பயன்படக்கூடிய கல்வித் துறைகளில் கவனம் செலுத்துவோர் மிகக் குறைவேயாகும். இவ்வாறு 1967-68-ம் ஆண்டுகளுக்கான நிர்வாக அறிக்கையில் தேசிய உயர் கல்விச்சபைத் தலைவர் டாக்டர் மலலசேகரா தெரிவித்துள்ளார். சர்வகலாசாலையில் பெருந்தொகை மாணவர்கள் கலைக் கல்வியே பயில்கின்றூர்களாகவும் சிறிய தொகையினரே விவசாயம், மருத்துவம், பொறியியல் ஆகிய துறைகளில் பயில்கிறூர்கள் எனவும் உயர்தரக் கல்வி நாட்டின் பொருளாதார சமூக நலன்களுக்குப் பயன்பட வேண்டுமாயின் இந்த நிலை மாற வேண்டுமெனவும் அறிக்கை கூறுகிறது.

—

## நினைவுக்கட்டம் அமைக்க முயற்சி

யாழ்ப்பாணம், ஞாயிறு

கூட்டுறவுத் துறையில் பெரும்பணியாற்றிய திருமதி பாலசிங்கம் நினைவுக்கட்டிடநிதிப் பொதுக் கூட்டம் இம்மாதம் 16-ந் திகதிமாலை கூட்டுறவுப்பயிற்சிக் கல்லூரியில் நடைபெறவிருக்கின்றது.

இக்கூட்டத்தில் கட்டிட அமைப்புப்பற்றியும், திரு. மதிபாலசிங்கத்தின் முதலாவதுஆண்டு அமரத்துவ தினத்திற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் ஆராயப்படவிருக்கிறது. (ந. நி.)




எப்பயிர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
அப்பயிர்க்கு 'ஷெல்' பூச்சி நாசினி பயனை பாவிக்காரெனில்.
AGENTS
ரோயல் டிஸ்பென்ஸறி
PHONE 397 JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘வடக்கில் ராணுவம் என்ன செய்கிறது’

# விசாரணைக் கமிஷன் நியமிக்க வேண்டும்

## பருத்தித்துறை எம். பி. கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

**‘வடபகுதியில் இராணுவத்தினர் புரியும் அட்டகாசம் பற்றி விசாரணை செய்ய அரசாங்கமோ அல்லது பிரதம மந்திரியோ ஒரு விசாரணைக் கமிஷன் நியமிக்கவேண்டும். அப்போதுதான் இராணுவத்தினர் வடபகுதியில் எந்த அளவில், எவ்வாறு, என்ன வேலைசெய்கின்றார்கள் என்பது தெரியவரும்.’**

இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சேபால அட்டிகலே விடுத்த அறிக்கை பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இராணுவத்தினரின் உற்சாகத்தைக் காப்பாற்றுவதற்காகவும்அவர்களிடையே பிரச்னையை உண்டாக்காமலிடும்பதற்காகவுமே இராணுவத் தளபதி இந்த அறிக்கையை விடுத்திருக்கக் கூடும் என்றும் திரு. துரைரத்தினம் குறிப்பிட்டார்.

இராணுவத் தளபதியின் இந்த அறிக்கை வடபகுதி மக்களைப் புண்படுத்துவதாக இருக்கும் ஒரு தவறுதலான அறிக்கை என்று சுட்டிக் காட்டிய திரு. கே. துரைரத்தினம் மேலும் தெரிவித்ததாவது:-

உண்மையாகக் கள்ளக் கடத்தல் செய்பவர்களை நண்பர்களாக வைத்துக் கொண்டு, சாதாரண பிரஜைகளை இராணுவத்தினர் காரணமின்றி நையப்புடைப்பது கண்டிக்கப்படவேண்டியதாகும். வடபகுதி அரசியல் வாதிகள் கள்ளக்கடத்தலை விருத்தி செய்ய இராணுவத்தினருக்கு எதிராக பொய்ப் புகார்கள் செய்வதாகக் கூறுவது சுத்த அபத்தம். தேவையற்ற முறையில் வடபகுதி எம். பி. எவரும் புகார் செய்யமாட்டார்கள்.

இராணுவத் தாக்குதல் பற்றிச் செய்யப்படும் புகார்கள், இராணுவத் தளபதி குறிப்பிடுவதுபோல, கள்ளக் கடத்தல் முயற்சிக்காகச் செய்யப்படும் சூழ்ச்சிதானு என்பதை விசாரிக்க ஒரு கமிஷன் நியமிக்கலாம். இப்படியொரு விசாரணைக் கமிஷன்நியமிக்கப்பட்டால், இராணுவத்தினர் வடபகுதியில் கள்ளக்கடத்தலைத்தடுக்கிறார்களா, எந்த அளவுக்கு இதில் தங்கள் கடமையைச் செய்துவருகின்றனர், அவர்கள் இங்கு செய்துவரும் வேலை என்ன? ஆகிய பல கேள்விகளுக்கு விடை கிடைத்துவிடும். (கா. நி.)

---

இராமசேவகர் இருவருக்கு

# காலை நீடிப்பு

முல்லைத்தீவு, சனி

வேலையில் சேர்ந்த காலம் முதல் இதுவரை சிங்களப் பரீட்சைக்குத் தோற்றவில்லை என்ற காரணத்தால் சென்ற வருடம் டிசம்பர் மாதத்துடன் வேலைநீக்கம் செய்யப்பட்டிருப்பதாக அறிவித்தல் பெற்ற புதுக்குடியிருப்புக் கிராமசேவையாளர் திரு. கோவிந்தபிள்ளையும், தண்ணீரூற்றுக் கிராமசேவையாளர் திரு. இ. சிவப்பிரகாசமும் பொது சேவைக் கமிஷனுக்கு அப்பீல் செய்து வெற்றியீட்டியுள்ளனர். அவர்கட்குக் கிடைத்த பதிலில் இன்னும் ஒன்றரை வருடங்களுக்குள் சிங்களத்தில்தேர்ச்சியடைய வேண்டும் என்றும் இல்லாவிடில் வேலைநீக்கம் செய்யப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

---

## வாலிபர் வேலைவாய்ப்பு

### யு. என்.பி.மாநாட்டின் முக்கிய அம்சம்

பம்பலப்பிட்டி, சனி

குளியாப்பிட்டியில் பெப்ரவரி 22, 23 ஆகிய தேதிகளில் நடைபெறவிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மாநாட்டில் வாலிபருக்கு வேலைவாய்ப்புப் பற்றி முக்கியமாக ஆராயப்படும். ஐக்கிய தேசியக் கட்சியின் வாலிபர் சங்கங்கள் பல இவ்விஷயம் பற்றிய தீர்மானங்களைக் கட்சியின் மேலிடத்துக்கு அனுப்பியுள்ளன. இவர்கள் செனட்டர் திரு. ஜினதாசாவின் தலைமையில் தாமதமின்றி இளைஞர்களுக்கு வேலைவழங்குவதற்கு வழிவகைகளைச் செய்யுமாறு கோரவிருக்கிறார்கள். இவர்கள் தங்கள் பகுதிகளில் உள்ள வேலையற்றோரின் எண்ணிக்கையையும் அவர்களின் பெயர்களையும் சமர்ப்பிக்கத் தீர்மானித்துள்ளதாகவும் கட்சியின் மேலிடத்துக்கு அறிவித்துள்ளார்கள். இவர்களின் இந்தப் பட்டியலில் எதிர்க்கட்சி ஆதரவாளர்களினது பெயர்களும் இடம்பெறும். படித்த இந்த வாலிபர்களுக்கு வேலை வழங்கிவிட்டால் திரும்பவும் ஐக்கிய தேசியக் கட்சி அதிகாரத்துக்கு வருதல் சாத்தியமாகாதெனஇவர்கள் மந்திரிகளுக்கு அறிவிக்கவிருக்கிறார்கள்.

---

# கடைக்குள் புகுந்தவர் காசுடன் பறந்தனராம்

சங்கானை, சனி

திடீரென கடைக்குள் புகுந்த இனந்தெரியாத நபர்கள் மேசை லாச்சிக்குள் இருந்த ரூபா1800/-ஐ எடுத்துக் கொண்டு மாயமாக மறைந்தனராம். இதுசம்பவம் இளவாலையில் நடைபெற்றது.

ஆறுமுகம் கந்தையா வென்னும் வர்த்தகர் கடையில் தனது பணத்தை எடுத்து கணக்கிட்டு இரண்டாயிரம் ரூபா தேவைக்கு மீதிப்பணத்தை வீட்டில் எடுத்து வருவதற்காக கணக்கிட்ட ரூபாவை மேசை லாச்சியில் வைத்துச் சென்றபோது அச்சமயம் கோப்பி வியாபாரம் செய்வதற்கு என அங்கே வந்து நின்ற இனந்தெரியாத நபர்கள் இருவர் திடீரென லாச்சியில் வைத்தபணத்தை அடித்துக் கொண்டு சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

விசாரணைசெய்த சங்கானை பொலிஸ் சார்ஜன்ட் லந்திரா சந்தேகநபர் சபாரத்தினம் பெனடிக் என்பவரை மானிப்பாயில் வைத்துக் கைது செய்துள்ளார். இவர்கள் வந்தகாரரையும் மற்ற சந்தேகநபரையும் கைது செய்வதில்பொலிசார் வலைவீசியுள்ளனர். கைது செய்யப்பட்ள்ள சந்தேகநபர் கொழும்பைச் சேர்ந்தவரும் பல குற்றங்களுக்கு சிறைபோனவர் எனவும் விசாரணையில் தெரியவந்துள்ளது. இவரை அடையாளம் காணும் அணிவகுப்பு இன்று மல்லாகம் நீதிமன்றத்தில் நடைபெற்றபின் இம்மாதம் 18-ம் திகதிவரை றிமாண்டில் வைக்கப்படுவார்.

## கள்ளக் கடத்தலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புகார்கள் செய்கின்றார்கள். இதற்கு சாதகமாக சில அரசியல் வாதிகளும் தூபம் போடுகின்றார்கள். இப்படியான பொய்ப்புகார்கள் மூலம் இராணுவத்தை இங்கிருந்து அகற்றிவிட்டு, தாம் சுலபமாகக் கள்ளக்கடத்தல் செய்யலாமென இவர்கள் கருதுகிறார்கள்.

இப்போது வடபகுதி ஆலயங்களில் திருவிழாக்கள் ஆரம்பமாவதால் ஆடம்பரப் பொருட்களையும், ஐவுளிகளையும் கடத்திக் கொண்டுவர இராணுவத்தினர் பொதுமக்களைத் தாக்குவதாகக் கூறுவது ஒரு பொய்ப் பிரசாரம் எனவும் இவர் இங்கு சுட்டிக் காட்டியுள்ளார்.

---

## தடை

சங்கானை, சனி

மானிப்பாய்சுகாதார க்கந்தோரில் பிறநாடு செல்லும் யாத்திரீகர் தடை' மருந்து பெறச்சென்று ஏமாற்றத்துடன் வீடு திரும்பும் நிலைஉருவாகியுள்ளது.

அண்மையிளதடைமருந்து எடுக்கச்சென்ற பிரயாணி ஒருவர் மேற்படி கந்தோரில் கடமைபுரியும் அதிகாரிகளின் ஒத்துழைப்பின்மையால் மருந்து விநியோகம் தடை ஏற்பட்டதாகவும் இதனல் தமது வெளிநாட்டு பிரயாணம் பின்போடப்பட் டதாகவும் புகார் செய்துள்ளாராம்.

---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1969-ம் ஆண்டு ஜனவரி மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

# ‘சிங்கள ஆசிரியர்களை இங்கு ஏன் அனுப்பவில்லை?’

திருமலை, சனி

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு சிங்கள ஆசிரியர்களை அனுப்புவதற்கு கல்வி அமைச்சர் ஐ, எம், ஆர். ஏ. ஈரியகொல்ல மூலம் நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் டட்லியைக் கேட்டிருக்கிறார். தமிழ் காங்கிரஸ் திருமலைக் கிளைத் தலைவரான திரு. எஸ். ஆறுமுகம்.

இதுசம்பந்தமாக பிரதமர் திரு டட்லி சேனநாயகாவுக்கு திரு. ஆறுமுகம்அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் தமிழைப் போதனு மொழியாக கொண்ட முஸ்லிம் பாடசாலைகளுக்கு கல்வி அமைச்சினல் சிங்கள ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டிருக்கையில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் மாணவர்கள் கற்கும் பாடசாலைகளில் ஒரு சிங்கள ஆசிரியராவது நியமிக்கப்படவில்லை. எந்த காரணமுமில்லாமல் கல்வி அமைச்சு இப்படி நடந்து கொள்வது மாற்றான் தாய் மனப்பான்மையாய் நடப்பதாக இருக்கிறதென்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

வடக்குகிழக்கு மாகாணங்களுக்கு சிங்கள ஆசிரியர்களை நியமிப்பதில் இன்னமும் காலம்கடந்து விடவில்லை. இந்த விஷயத்தில் தமிழ் மாணவர்களின் எதிர்கால நலன் கருதி கல்வி அமைச்சு சிங்கள ஆசிரியர்களை வடக்கு கிழக்கு தமிழ் பாடசாலைகளுக்கு அனுப்ப நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இம் மகஜரின் பிரதிகள் தமிழரசு, தமிழ் காங்கிரஸ் தலைவர்களுக்கும் சகல தமிழ் ஆட்சி மன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

---

இம் மாத இறுதிக்குள்

# 20 புதிய தாதிகள் நியமிக்கப்படுவர்

நல்லூர், சனி

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரிக்கு 20 புதிய தாதிகள் இம்மாதம் இறுதிக்குள் வரவிருக்கின்றனர்.

இங்கு நிலவும் தாதிகள் பற்றுக்குறையைச் சமாளிக்குமுகமாகவே இவர்கள் இங்கு அடுத்தமாதத்திலிருந்து கடமையாற்றுவதற்காக இங்குவரவிருக்கிறார்கள்.

யாழ். ஆஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகர் டாக்டர் டி. சண்முகநாதனை இன்று சந்தித்த தாதிகள் பிரதம அதிகாரி செல்வி ராஜபக்ஜ இதனை அவரிடம் தெரிவித்தார்.

இங்கு புதிதாக வார்ட்டுகள் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து நோயாளிகள் தொகை அதிகரிக்கப்பட்டதையும் இதன் காரணமாக மேலதிக தாதிகள் சேவைக்குத்தேவை யெனவும் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் சண்முகநாதன் விடுத்திருந்த வேண்டுகோளைத் தொடர்ந்தே இங்கு இருபது புதிய தாதிகள் அனுப்பிவைக்கப்படவிருக்கின்றனர்.

---

# வல்வெட்டித்துறையில் ஜெயபபிரகாஷ்

வல்வெட்டித்துறை, சனி

இலங்கை மக்கள் காந்தியில் எவ்வளவோ நம்பிக்கை வைத்திருக்கிறார்களென்பது எனது இலங்கை விஜயம் எடுத்துக் காட்டுகிறது. அவரிடம் நம்பிக்கை வைத்திருக்கும் நீங்கள் அவரின் இலட்சியத்தைக் கடைப்பிடித்து ஒழுகத் தவறக்கூடாது.

வல்வெட்டித்துறைநெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோவிலடியில் பட்டினசபைத் தலைவர் திரு. எம். வி. இரத்தினவடிவேல் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பிரபல காந்தியவாதியும் சர்வோதய இயக்கத் தலைவருமான திரு, ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் நாராயண் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து கூறுகையில் காந்தி நூற்றாண்டு விழா கொண்டாடும் இவ்வேளைகளில் வட இலங்கைப் பகுதிகளில் தீண்டாமை என்பது இருந்து வருவது மனவருத்தத்திற்குரியதாகும். கோவில்களில் தீண்டாதவர்களை விடுவதில்லை என அறிவது வெட்கத்திற்குரிய செயலாகும். அவரது வழியைக் கடைப்பிடிக்கும் நீங்கள் தீண்டாமையை போக்கிக் கொள்வதை உங்கள் இலட்சியமாக்கி க்கொள்ளவேண்டும்.

வல்வெட்டித்துறை மக்கள் சார்பில் பணமும் ஒரு மண்வெட்டியும் சம்பத்துதானம் செய்து அவை யாழ். மாவட்ட சர்வோதய கமிட்டியிடம் ஒப்படைக்கப்பட்டது.

---

## தமிழரசு......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படியான சூழ்நிலையில் ர்த்னசாரதேரோ மாண்டார் என்பது இலங்கைச் சரித்திரத்தில் என்றும் நிலைத்து நிற்கும். இந்த நிகழ்ச்சியை பொதுமக்கள் மறந்துவிடாது நினைவில் வைத்து, தேசிய அரசாங்கம் மீண்டும் ஆட்சிக்கு வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும்' என்றார்.

---

## விரைவில்.. ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொழில் விருத்திக்கென்று நீர் விநியோகிக்கப்பட்டுவருகிறது.

கைத்தொழில் பேட்டைக்கான நீரை வாய்க்கால் மூலம் பெற்றுக்கொடுப்பதற்கான வேலையை வட மாநிலபொறிஇயல் நிபுணர் திரு. எஸ். புவனேஸ்வன்ர கவனிப்பார்.

---

## மரண அறிவித்தல்

காலஞ்சென்ற அமிர்தலிங்கத்தின் அருமை மனைவி சிவபாக்கியம் 11-1-69ல் சிவபதமடைந்துவிட்டார். இவர், நீர்ப்பாசன இலாகா கணக்காளர் அட்சரமூர்த்தியின் மனைவி பரமேஸ்வரியினதும், அரசாங்க வேலைப் பகுதி மேற்பார்வையாளர் நாகலிங்கத்தினது மனைவி புஷ்பராணியினதும் மாமியாராவர். அன்னரின் பூதவுடல் சிவன் பண்ணை வீதி 36-ம் இலக்க இல்லத்தில் இருந்து பிற்பகல் 4 மணிக்கு ஈமக்கிரிகைகளுக்காக வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் நண்பர்களும் உறவினர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

505

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org